சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 4	இதழ்: 06	நவம்பர் - 2022	விலை - ரூ.15/-
VOL:4	ISSUE: 06	NOVEMBER - 2022	Rs. 15/-



தெய்வீக அன்னை ஸ்ரீ சாரதா தேவி!

Digital Art by:

சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு *550* ரூபாய் செலுத்தி சந்தாதாரராகுங்கள்!

அறிய
பொக்கிஷமான "சாயி தாயத்தை"
இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"



* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.

* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: 50₹/ மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI
ஆண்டு-4 மலர்-4 நவம்பர் - 2022

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பர பிரிவு
திரு.T. கார்த்திகேயன், கோவை

கௌரவ ஆலோசகர்கள்
திருமதி. S.சாந்தி, சென்னை.
திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி, சென்னை.
திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.
திரு. B.முருகன், சோழவந்தான்.
டாக்டர் செல்வி. S.சௌம்யா, ஊட்டி

இதழ் வடிவமைப்பு
சிகரம் பப்ளிகேஷன்

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்
எண்:17/7A. பழனியப்பா முதல் தெரு, 1-வது மாடி, அயனாவரம், சென்னை 600 023.
செல்: 99418 16692,88258 31068.

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.



என் அன்பு குழந்தாய்!

உன் வாழ்க்கையில் என்ன நடந்ததோ, அது நன்றாக நடந்தது. எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாக நடக்கும். எது நடக்க போகின்றதோ அதுவும் நன்றாக நடக்கும் என்ற கீதாசாரத்தை நீ அறிவாய் அல்லவா!

அதை போலவே என் குழந்தையான நீ வாழும் வாழ்க்கை என்னும் யுத்த களத்தில் உனக்குண்டான உபதேசத்தை நான் கூறுகிறேன்.

உன்னை முதுகில் குத்துபவர்களைக் கண்டு வேதனை கொள்ளாதே! போர்களத்தில் புற முதுகை குத்துப வர்கள் வீரமானவர்கள் அல்ல!

அவர்களின் கோழைத்தனம் தான் அவர்களை வீழ்த்தும். யாராக இருந்தாலும் அறம் என்பது ஒன்றே! அதற்கு பல்வேறு முகங்கள் இல்லை!

ஒரே முகம் தான் அந்த முகத்தை உன்னிடம் பார்க்கிறேன். உனது நேர்மை உன்னை வழிநடத்திச் செல்லும். உனக்கான அனைத்தும் விரைவில் கிடைக்கும்!

உன்னை விட்டு நான் ஒருபோதும் விலகுவதும் இல்லை. என்னை விட்டு உன்னை விலகி போகும்படி நான் செய்வதும் இல்லை. நீ ஜெயமாக நல்ல ஆரோக்கியத்துடன் எல்லா செல்வங்களையும் பெற்று சீரும் சிறப்பு மாய் நல்ல பெயருடன் நிம்ம தியான மகிழ்ச்சியான வாழ்க்கையை பெறுவாய்!

- பகவான் ஸ்ரீ சாயிபாபா

அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!



பகவான் சாயிநாதரின் அருளால் ஐம்பத்து இரண்டாவது இதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சென்ற இதழின் வெளியீட்டு விழா 02.10. 2022 ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு நமது ஸ்ரீ சாய்ராம் ஆத்ம ஞான சபையில் (17/7A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி, அயனாவரம், சென்னை23) வெகு விமரிசையாக நடைபெற்றது.

நமது இதழில் "சித்தர் நேசன்" திரு. வெங்கடேசன் அவர்களால் தொடர் கட்டுரையாக எழுதப்பட்டுவரும் சித் தர்களின் சீவசமாதி தரிசனம் கட்டு ரையின் 50 ஆவது சிறப்புக்கட்டுரை வெளியீட்டாகவும் இம்மாத விழா இருபெரும் விழாவாக நடைபெற்றது.

வழக்கம்போல் விழா காலை 8.00 மணிக்கு ஆசிரியரின் தியான நிகழ்வு, மற்றும் சத்சங்கத்துடன் துவங்கியது. காலை 10.00 மணிக்கு பாபா பாடகர், "சிம்மக்குரலோன்" திரு. சந்திரன் அவர்கள் பாபாவின் பாடல்களை பாடி அசத்தினார். தொடர்ந்து செல்வி. அமிர்தா அட்சயா ஆகியோரின் பஜனை நிகழ்ச்சி நிகழ்ந்தது.

10.30 க்கு பக்தர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த மயிலை ஸ்ரீ கயிலை சித்தர் சுவாமிகள் அவர்கள் நமது விழாவிற்கு எழுந்தருளினார்கள். சித்தர் அவர்கள் நமது ஆசிரியர் செய்து கொண்டிருக்கும் அன்னதான சேவையை வாழ்த்தி அன்னதான த்திற்கு அரிசி வழங்கி ஆசிபுரிந்தார்கள்.

பாபா பாடகர் திரு. சந்திரன் அவர்கள், அன்னதானத்திற்கு ரூ.10000/ தை





நமது ஆசிரியரிடம் வழங்கி வாழ்த்தி னார்கள். திருநீர்மலை திரு. அகஸ்டின் அவர்கள் நியூ ஈரா கார்மெண்ட் சார்பில் 25 கி. அரிசி வழங்கினார்கள்.

தொடர்ந்து இம்மாத இதழை ஸ்ரீ கயிலை சித்தர் சுவாமிகள் அவர்கள் வெளியிட, சித்தர்கள். காம் திரு. முத்து மகேஸ்வரன், திருமதி மோனிகா முத்து மகேஸ்வரன் அவர்களும், குருவருள் வேண்டி திரு. அசோக்குமார் அவர் களும் பெற்றுக்கொண்டு சிறப்பித் தார்கள்.

விழாவில் சித்தர்கள் சீவசமாதி இருசக்ர வாகன யாத்திரை நிர்வாகிகள், சித்தர் பிரபஞ்சம்,திரு. கோ.சுப்பிரமணி, திரு. கா. முத்துக்குமார். திரு.சித்தர் ஜீவன். சு. வெங்கடேசன், சித்தர்ஸ். காம் திரு. முத்து மகேஸ்வரன், திருமதி.மோனிகா முத்து மகேஸ்வரன் மற்றும் ஆன்மீக பக்தர்கள் ஏராளமா





னோர் கலந்து கொண்டனர்.

விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் சித்தர்கள் யாத்திரைக் குழுவினர் மரக்கன்றுகள், மற்றும் ருத்திராட்ச பிரசாதம் வழங்கி மகிழ்ந் தார்கள்.

இம்மாதம் நமது இதழுக்கு, விழுப்பு ரம் செல்வம் அவர்கள் இரண்டு மூன்று வருட சந்தாக்களையும், மதுரை சிவமணி அவர்கள் ஐந்து ஒரு வருட சந்தாக்களையும் சென்னை சரண்யா அவர்கள் ஒரு வருட சந்தா ஒருவரையும் இணைத்து சாயி சேவை செய்திருக் கின்றார்கள்.

அவர்களும், அவர்களது குடும்பத் தினர் அனைவரும் பகவான் சா யிநாதரின் அருளால் அனைத்து நலன்க ளும் பெற்று வாழ்க வளமுடன் என்று வாழ்த்துகிறோம்.

வந்திருந்த அனைத்து பக்தர் களுக்கும், சாய் தியானாலயா பிரார்த் தனை மையம் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது. மேலும் இதழ் வெளியீட்டை ஒட்டி ஏழை எளியவர் களுக்கு அவர்கள் இருக்கும் இடம் தேடிச்சென்று அன்னதானம் வழங்கப் பட்டது.

பகவான் சாயிநாதரின் அருளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று, உலக மாந்தர்கள் அனைவரும் போர், பகை, அச்சமின்றி, ஆரோக்கியத் துடனும், நிம்மதியுடனும் வாழ வேண்டும் என் பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம்.

மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்!

வாழ்க வளமுடன்!
வாழ்க வையகம்!

- அன்புடன் ஆசிரியர்.

"வாக்கை காப்பாற்று"

புனேயைச்சேர்ந்த காசிநாத் துபே என்பவரது மகன் ரகுநாத் துபே, அவர் தனது மனைவி குழந்தைகளுடன், பாபாவைக் காண சீரடிக்குச் சென்றார். ரகுநாத்தைக் கண்டவுடன், பாபா,

"சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டும். அப்படி இல்லை என்றால் அதற்கான பலனை அனுபவிக்க வேண்டி வரும்" என்றார்.

யாருக்கு புரிந்ததோ இல்லையோ ரகுநாத்திற்கு உடனடியாகப் புரிந்து போனது. உடனடியாக பாபாவின் பாதங்களில் தலையை வைத்து, இனி ஒரு போதும் அப்படி நடந்து கொள்ள மாட்டேன் என்னை மன்னித்து விடுங்கள் தெய்வமே என்று சரணாகதியடைந்தார்.

ரகுநாத் அப்படி என்ன தவறு செய்தார். தெரிந்துகொள்வோம் வாருங்கள்.

ரகுநாத் தனது தந்தை காசிநாத்துடன் ஒரே குடும்பமாக புனேயில் வசித்து வந்தார். 1913 ஆம் வருடம் புனே நகரில் பிளேக் நோய் கோரத் தாண்டவம் ஆடத் தொடங்கியது. எனவே புனே நகர மக்கள் அனைவரும் தங்கள் மூட்டை முடிச் சுகளை கட்டிக்கொண்டு நகரை விட்டு வெளியேறத்தொடங்கினர்.

எனினும் காசிநாத் தன் வீட்டை விட்டு வெளியேறவில்லை. ஏனெனில் அவருக்கு பாபாவின் மேல் அதீத நம்பிக்கை இருந்ததால், பாபா எந்த ஒரு இக்கட்டில் இருந்தும் தன்னை நிச்சயமாக காப்பாற்றுவார் என்று மிக உறுதியாக நம்பினார்.

எனினும் அவர் மகன் ரகுநாத்திடம் குடும்பத்தை அழைத்துக் கொண்டு மாமியார் வீட்டிற்குச் சென்று தங்கிவிடும் படி கூறினார். ரகுநாத்தும் தந்தையின்



சொல்லுக்கு கட்டுப்பட்டு புனேயை விட்டு புறப்படத் தயாரானார். ஆனால் அதற்குள் ஒரு முறை சீரடி சென்று பாபாவின் தரிசனம் பெற விரும்பி மனதிற்குள் பிரார்த்தித்துக் கொண்டார்.

இருப்பினும், தனது சிறு குழந்தைகள், கர்பிணி மனைவியுடன் நீண்ட தூரம் பயணிப்பதற்காக பொருட்களை சேகரித்து தயார் செய்வதில் முனைப்புடன் ஈடுபட்டதால் சீரடி செல்ல மறந்து விட்டார்.

பிறகு, தந்தையிடம் விடை பெற்றுக் கொண்டு தன் மனைவியோடும், இரண்டு மகன்களோடும் தன் மாமியார் வீடு இருக்கும் கர்நாடகா மாநிலத்திற்கு இரயிலில் பயணமானார். தோண்ட் என்ற இரயில் நிலையம் அடையும் வரை எல்லாம் நல்லபடியாகத்தான் இருந்தது.

அதன்பிறகு, நல்ல ஆரோக்கியத்துடன் இருந்த அவரது இளைய மகன் திடீரென்று கடும் காய்ச்சல் கண்டு அவதிப்பட்டான்.

மகனின் நிலை கண்டு மனமொடிந்து போன நிலையில், அவரது மனைவிக்கும் கடுமையான காய்ச்சல் வந்து விட்டது.

மாலை ஆனவுடன் காய்ச்சலின் தன்மை தீவிரமடைந்து பிளேக் நோயின் அறிகுறிகள் தென்பட ஆரம்பித்தன.

இறுதியில் ஒரு வழியாக எப்படியோ சமாளித்து அவரது மனைவியின் கிராமமான நாவல்குதாஸ் என்ற ஊரை சென்றடைந்தார். ஆனால் ரகுநாத்தின் பிரச்சனைக்ள் அதோடு நிற்கவில்லை. அந்த கிராமத்தில் அவருக்கு ஒருவரையும் தெரியாது. அங்கு பேசப்படும் கன்னடமும் அவருக்குத் தெரியாது.

அங்கு முதலில் ஒரு மருத்துவரை அவரால் கண்டு பிடிக்கமுடியவில்லை. பிறகு ஒரு நல்ல மனிதர் இவர் படும் கஷ்டத்தை கண்டு இவரோடு நட்பு பாராட்டி, இவருக்கு உதவிகள் செய்ய முன்வந்தார்.அவர் ஒரு மருத்துவரை ரகுநாத்தின் மனைவிக்கு சிகிச்சை அளிப்பதற்காக அழைத்து வந்தார்.

அவரது மனைவியின் உடலை பரிசோதித்த மருத்துவர், அவள் அப்போது ஆறு மாத கர்ப்பிணியாக வேறு இருந்ததால், அவள் உயிர் பிழைக்க வாய்பில்லை என்று அவளுக்கு சிகிச்சை அளிக்க மறுத்துவிட்டு சென்று விட்டார்.

ரகுநாத் அந்த வீட்டின் மூத்த உறுப்பினர் என்ற வகையில் அனைத்து பொருப்புகளும் அவரின் தலையில் விழுந்தது. அவர் மனைவியின் நிலையோ மிகவும் மோசமாகிக் கொண்டே போனது. இதனால் முற்றிலும் விரக்தியடைந்து, அநாதரவான நிலையில் ரகுநாத் பாபாவிடம் உதவிக்காக தன்னை மறந்து கதறினார்.

முழுமையான பக்தியுடனும், நம்பிக்கையுடனும், பாபாவின் பாதங்களில் தன்னுடைய பிரச்சனைகளை சமர்ப்பித்தார். இவ்வாறு அவர் பிரார்த்தி த்த அன்றைய தினமே பாபா மாலை நான்கு மணியளவில் ரகுநாத்திற்கு தனது சத்திய சொரூபத்தைக் காட்டி அருள் புரிந்தார்.

ஆம், சீரடியில் வாழும் தெய்வம், கர்நாடகாவில் ஒரு சிறிய கிராமத்தில் இருந்த ரகுநாத்தின் வீட்டிற்கு எழுந்தருளியது. பாபா அவரது வீட்டின் வடக்கு புற கதவின் வழியாக உள்ளே வந்து அங்கிருந்த மனைப்பலகையில் அமர்ந்தார். பிறகு அங்கு நோய்வாய்ப்பட்டு படுத்திருந்த ரகுநாத்தின் மனைவியை கருணையோடும், கனிவோடும் உற்று நோக்கினார்.

பின் தன்கைகளில் இருந்த கமண்டலத்தில் இருந்து தீர்த்தத்தை எடுத்து பருகக் கொடுத்தார். தன் திருக்கரங்களால்



அவளது தலையை தடவிக்கொடுத்த பாபா, தன் கப்பினியில் இருந்து உதியை எடுத்து அவளுக்கு பூசிவிட்டு அவளை ஆசீர்வதித்தார்.

அதன்பிறகு ரகுநாந்திடம் மராட்டியில், "சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டும். அப்படி இல்லை என்றால் அதற்கான பலனை அனுபவிக்க வேண்டிவரும்" என்றார். இவ்வாறு பாபா கூறிக்கொண்டிருக்கும் போதே அருகில் சில குழந்தைகள் சத்தமாக கத்தின. எனவே ரகுநாத்தின் கவனம் சற்றே திசை திரும்பியது. என்ன சத்தம் என்று ரகுநாத் திரும்பிப் பார்த்துவிட்டு மீண்டும் பாபாவைப் பார்த்தால் அதற்குள் பாபா மாயமாகிப் போனார்.

இவை அனைத்தையும் கண்டு அதிர்ச்சியில் வாயடைத்துப் போய் நின்றிருந்த ரகுநாத்திற்கு என்ன நடந்தது என்றே புரியவில்லை. ஆனால் அவரின் மனைவியைப் பார்த்த போது அவளது நெற்றியில் உதி இடப் பட்டிருந்தது. எனவே பாபா அவர்களது நல் வாழ்விற்காக, அவரது வீட்டிற்கு வந்தது உறுதியாகிப்போனது.

அன்று இரவு 9 மணியில் இருந்து அவளது காய்சல் குறையத் தொடங்கியது. அடுத்த நாள் காலையில் அவரது மனைவி பிளேக் நோயின் பிடியில் இருந்து விடுபட்டு நடமாடும் அளவிற்கு நன்கு குணமடைந்தாள்.

அதற்குப்பிறகு, சிறிது காலம் சென்ற உடன் ரகுநாத் தன் குடும்பத்தாருடன் சீரடிக்குப் புனிதப் பயணம் சென்று பாபாவை தரிசித்தனர். அப்போது பாபா ரகுநாத்திடம், "சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டும். அப்படி இல்லை என்றால் அதற்கான பலனை அனுபவிக்க வேண்டிவரும்" என்றார்.

அதற்குப்பின்பு ரகுநாத் தன் வாழ்நாள் முழுவதும் பாபாவின் வாக்கை பின்பற்றி, தன் வாயில் இருந்து வரும் வார்த்தைகளை நன்கு யோசித்து பேசுவதை வழக்கமாக்கிக் கொண்டார்.

நாராயண் கோவிந்த் சந்தோர்கர்



பாபாவின் பக்தர்களில் மிகவும் முக்கியம் வாய்ந்தவர். பாபாவாலேயே வரவழைக்கப்பட்டு, பயிற்சியளிக்கப்பட்டவர். அவரது உன்னதமான அந்தஸ்து காரணமாக, மேல் தட்டு மக்கள், மெத்தப் படித்தவர்கள், உயர் பதவியில் இருப்பவர்கள் ஆகியவர்களிடம் பாபாவை பற்றி கூறி அவர்களையும் பாபாவின் பக்தர்களாக மாற்றியவர்.

மகாராஷ்டிர மாநிலத்தில் சாயி பக்தி பரவ இவரே மூலகாரணம். தமது குருவாகவும் வழி நடத்துபவருமாக பாபாவை பெற்றதால் அதிக ஒளியுடன் பிரகாசித்தார். பாபா இந்து மத புனித நூலான ஸ்ரீமத் பகவத் கீதையில் ஒரு ஸ்லோகத்திற்கு நானாவிடம் மிகவும் விரிவாக விளக்கமளித்த விபரத்தை சத்சரிதத்தில் நாம காணலாம்.

சாய் தியானாலயாவில் "சாயி லீலா"

– ஜெயந்தி ஸ்ரீராம்

லீலை:12, சீரடி பயணத்தில் பாபாவின் லீலை தொடர்ச்சி..

கலியுகக் கடவுள் சாயிநாதரை ஒருவர் முழுமையாக சரணடைந்துவிட்டால் அவருக்கு நிகழும் அத்தனை பிரச்சனைகளுக்கும் மாற்று ஏற்பாடுகளை அடுத்த நொடியே பாபா கொடுத்தருள்வார் என்பதற்கு சாட்சி அன்று நடந்த அன்னதானம்.

நமது குரு தன்னுடன் வந்திருக்கும் யாத்திரீகர்களுக்கு மதிய உணவிற்கு ஏற்பாடு செய்யவில்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டே பேரூந்தைவிட்டு இறங்க, திரு.குப்தா அவர்கள் 50 நபர்களுக்கும் சாப்பாடு தயாராக இருக்கின்றது என்றவுடன், திரு.குப்தாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு நன்றி கூறிவிட்டு சாயியின் லீலையை எண்ணிக்கொண்டே அன்னக் கூடத்திற்குள் நுழைந்தார்.

குருவைத் தொடர்ந்து நாங்களும் அன்னகூடத்திற்குள் நுழைந்தால் அங்கு எங்களுக்கு ஆனந்த அதிர்ச்சி காத்திருந்தது. மணி இரண்டாகி விட்டதால் அனைவரும் நல்ல பசியுடன் இருந்தனர். பசிக்கு எது கிடைத்தாலும் சாப்பிடலாம் என்று வந்தவர்களுக்கு நாங்கள் எதிர்பாராவண்ணம் தமிழ் நாட்டு உணவான சாதம், சாம்பார், ரசம், மோர், வத்தல்குழம்பு, வடை பாயாசத்துடன் அனைத்தும் சுடச்சுட தயாராக இருந்தது.



என்னே பாபாவின் லீலை. தன்னை நாடிவரும் பக்தர்களுக்கு என்ன தேவையோ அதை அவர்களே எதிர்பாராவண்ணம் தயாராக கிடைக்க வைப்பதே சாயிலீலை அல்லவா. குரு அடிக்கடி நமக்கு சீரடியில் நல்ல தங்குமிடமும், நல்ல தமிழக உணவும் கிடைத்தால் நன்றாக இருக்கும் என்று கூறிக் கொண்டே இருப்பார். அதை பாபா எங்கனம் நிறைவேற்றி வைத்திருக்கின்றார் பார்த்தீர்களா?

எப்படி குரு நினைத்தால் மட்டும் சாயி உடனே நிறைவேற்றி வைக்கின்றார் என்று நினைப்பேன். ஆனால் நம்மைப் போன்று ஒரு நாள் கூட அவர் தீவிரமாக சாயியை வணங்கி நான் பார்த்ததில்லை. பாபாவின் ஆலயத்திற்குச் சென்றால் கூட நான் கேட்டால் தான் எனக்கு ஒரு பூமாலை வாங்கிக் கொடுப்பார். அவர் ஒருபோதும் இதுவரை ஒரு பூவைக்கூட பாபாவிற்கு சமர்ப்பித்ததில்லை.

இதைப்பற்றி குருவிடம் கேட்டால், எதை எதையோ கொடுப்பதற்குப் பதில் உன்னையே கொடு, எதைஎதையோ கேட்பதிற்குப் பதில் அவரை கேட்டுவிடு என்பார். உங்களுக்கு தேவை என்றால்தான் சாயியை தேடுகின்றீர்கள். எனது தேவையே சாயிதான் என்பார்.

குரு சீரடியில் ஒருவரை நம்பி ஏற்பாடுகளை செய்யச் சொன்ன நபர் அவரை ஏமாற்றவில்லை என்றால் இம்மாதிரியான வசதியான தங்குமிடமும், நல்ல தமிழக உணவும், நமக்கு கிடைத்திருக்குமா. எனவே இவை எல்லாம் பாபாவின் லீலையே!

இந்த பெருமை எல்லாம், இக்கட்டான நேரத்திலும், இவை எல்லாம் பாபாவின் லீலை எனச் சரியாக புரிந்து கொண்டு, பதட்டப்படாமல் எங்களை வழிநடத்திய எங்கள் குருவையே சேரும்.

பிறகு ஓய்வான நேரத்தில் குருவிடம் யாத்திரீகள், நீங்கள் நம்பியவர் உங்களை ஏமாற்றி விட்டார். அதிலும் சில பொருளாதார இழப்புகளை நீங்கள் சந்தித்திருப்பீர்கள். இருந்தும் ஒரு இடத்தில் தங்குவதற்கு முன்பதிவு செய்து அதையும் நீங்கள் பயன்படுத்தவில்லை. அதிலும் சில பொருளாதார இழப்புகள் இருக்கும்.

உங்களை ஏமாற்றியவரின் சீரடி முகவரி உங்களிடம் இருக்கின்றது. அங்கு சென்று பார்க்கலாம் என்றால் வேண்டாம். என்று கூறி விட்டீர்கள். அனைத்தும் இருந்தும் எப்படி பதட்டப்படாமல் எங்களை வழிநடத்தினீர்கள் என்று கேட்க, குரு அவர்கள் ஒரே வரியில் பதில் அளித்தார்கள். இந்த சீரடியில் எதை நாம் இழந்தாலும், அது பாபாவிற்கு நாம் செலுத்தும் காணிக்கையே! எதைப் பெற்றாலும் அது பாபாவின் பிரசாதமே! இது என் மனதில் ஆழமாக பதிந்திருக்கின்றது. இங்கு எல்லாம் பாபா! எல்லாமே பாபா! என்ற சரணாகதி வந்துவிட்டால் எப்படிவரும் பதட்டம் என்றார்.

லீலை: 13. சீரடியில் குருவிற்கு பைரவரின் துணை.

சீரடி சென்றதும் பக்தர்கள் அனைவரும் சாயிநாதரை தரிசனம் செய்ததும். எங்காவது ஓரிடத்தில்





அனைவரையும் அமரச்செய்வார். கூட்டத்தில் நடுநாயகமாக குரு அவர்கள் அமர்ந்ததும் உடனே பைரவர் ஒருவர் கூட்டத்தை விலக்கிக் கொண்டு சரியாக குருவிடம் சென்று அமர்ந்து விடுவார்.

குரு அனைவரிடமும் இந்த பைரவரை நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் அனைவரும் சீரடியில் எங்கு சென்றாலும் இறுதியில் இங்கு வந்துவிடுங்கள். யார் இல்லை என்றாலும் பயப்படவேண்டாம். இந்த பைரவர் இதே இடத்தில் படுத்திருப்பார். இங்கேயே நீங்களும் அமர்ந்து கொள்ளுங்கள்.எல்லோரும் வந்த உடன் தங்குமிடத்திற்குச் செல்லலாம். என்று கூறுவார்.

அதைப்போலவே, அந்த பைரவர் அங்கேயே இருக்கும். அனைவரும் எங்கு சுற்றினாலும் நாங்கள் அமர்ந்த இடத்திற்கே வந்து பைரவரைச் சுற்றி அமர்ந்து கொள்ளுவோம். குரு வந்தவுடன் பைரவர் அவர் மடியில் சென்று அமர்ந்து கொள்ளும். பைரவர் அவரின் மடியை விட்டு எழுந்து கொள்ளும் வரை குரு சத்சங்கம் செய்வார். அதிகபட்சமாக நான்கு மணிநேரம் வரை கூட சத்சங்கம் நீண்டதுண்டு. பைரவர் எழுந்து கொண்டால் தான் குருவும், நாங்களும் எழுந்து கொள்வோம்.

ஒருமுறை ஐம்பது நபர்களுடன் நானும் குருவுடன், சீரடிக்குச் சென்றேன். அனைவரும் தரிசனம் முடித்து திரும்பும் போது இரவு பத்து மணியாகிவிட்டது. அன்று ஹோலி பண்டிகை வியாழக்கிழமை வேறு. கூட்டம் அதிகமாக இருந்தது. தரிசனம் முடித்து எங்கள் குழு வெளியே வந்தபோது எப்படியோ அனைவரையும் தவறவிட்டுவிட்டு தனியாக நின்றேன்.

எங்கள் குழுவினர் ஒருவரை கூட காணவில்லை. எனக்கு சற்று பயமாகிவிட்டது. சாயிநாதா என்னை எங்கள் குழுவிடம் சேர்த்துவிடுங்கள் என்று மனதிற்குள் வேண்டினேன். அடுத்த விநாடியே ஒரு பைரவர் வந்து என்னருகே நின்று ஒரு சில விநாடிகள் என்னையே பார்த்துக் கொண்டு நின்றது.அடுத்த விநாடி கூட்டத்திற்குள் புகுந்து மெதுவாக நடக்க ஆரம்பித்தது.

சீரடியில் பைரவரின் உதவி பலவிதங்களில் தனக்கு கிடைத் திருப்பதை குரு என்னிடம் ஏற்கனவே கூறியிருப்பதால், நான் உடனே பாபாவின் மேல் நம்பிக்கை வைத்து பைரவரைப் பின் பற்றி நடக்கத் தொடங்கினேன். ஐந்து நிமிட

நடைக்குப் பின் பைரவர் சரியாக எங்கள் குழு அமர்ந்திருந்த இடத்திற்கு சென்று நின்றது. நான் மனதிற்குள் ஆயிரம் முறை சாயிநாதருக்கு நன்றி கூறினேன். பைரவர் மீண்டும் ஒருமுறை என்னை திரும்பிப் பார்த்து விட்டு, குருவின் மடியில் சென்று அமர்ந்து கொண்டது.

கொரோனா வருவதற்கு முன்புவரை, காலையில் 4 மணிக்கு சமாதி மந்திரில் அனைவரும் குருவின் தலைமையில் தியானம் செய்வோம். தியானத்திற்கு முன்பாக குரு அவர்கள் அனைவரையும் இடம் விட்டு வசதியாக அமரச் செய்வார்.

அதன் பின்பு, நாம் அனைவரும் சாயிநாதரின் சந்நிதியில் தவம் செய்யும் பேறு பெற்றிருக்கின்றோம்.

அனைவரும் சாயிநாதரையே நினைத்துக் கொண்டு கண்களை மூடிக்கொள்ளுங்கள். என்ன நடந்தாலும் நான் கூறுகின்ற வரையில் யாரும் கண்களை திறக்கக்கூடாது. பகவான் சாயி நம்மை ஆசீர்வதிப்பார் என்று கூறி தவத்தை ஆரம்பிப்பார்.

தவம் தொடங்கிய சில நிமிடங்களில் ஒரு பைரவர் வந்து அனைவரின் தலையிலும் தன் முன்னங்கால்களை தூக்கி ஆசீர்வதிப்பதுபோல் செய்வார். ஒருசிலரின் தோள்பட்டையில் இரண்டு கால்களையும் தூக்கி வைத்துக் கொண்டு நிற்பார். அப்போது சிலர் பயந்து கண்விழித்துவிடுவர். அவர்களை குரு பதட்டப்படாமல் இருக்குமாறு அறிவுறுத்துவார்.

சரியாக இருபது நிமிடம் கழித்து அனைவரும் தியானம் முடித்து கண்விழித்தால் பைரவர் குருவின் மடியில் படுத்து உறங்கிக் கொண்டிருப்பார். குரு அவரை தொந்தரவு செய்யாமல், அவர் விழித் தெழும் வரை சத்சங்கம் செய்வார். இந்நிகழ்வு ஒவ்வொரு பயணத்திலும் தவறாது நடைபெறும்.

இந்த வருட ஜூலை மாத பயணத்தில் கொரோனாவை காரணம்





காட்டி சீரடி சமஸ்தான் நிர்வாகம் எங்களை உள்ளே தியானம் செய்ய அனுமதிக்கவில்லை. ஆகையால் சீரடியில் இருந்து மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள சிவநேசன் சமாதியில் தியானம் செய்யலாம் என்று கூற நாங்கள் அனைவரும் அதிகாலை 5 மணிக்கு சிவநேசன் சமாதிக்கு நடந்தே சென்றோம்.

நாங்கள் நடக்க ஆரம்பித்த உடன் சற்று தூரத்தில் இரண்டு பைரவர் கள் வந்து எங்களுடன் சேர்ந்து கொண்டார்கள். குரு எங்களுக்கு முன்னால் சென்று கொண்டிருந்தார். பைரவர்கள் மெல்ல, அனைவரையும் கடந்து குருவுடன் சேர்ந்து கொண்டு நடக்கத் தொடங்கியது.

தொடர்ந்து குருவின் பின்னே நடந்து வருவதால் பக்தர்கள் இருவர், குருவே, இரண்டு நாய்கள் வெகு தூரம் உங்கள் பின்னாலேயே நடந்து வருகின்றன. அதற்கு பிஸ்கெட் வாங்கிப் போடுங்களேன் என்று கூற, அதற்கு குரு நீங்கள் வேண்டுமானால் வாங்கிப் போடுங்கள் என்றார்.

உடனே இரண்டு பக்தர்களும் ஆளுக்கொரு பக்கமாய் போய் தேடி கண்டுபிடித்து பிஸ்கெட் பாக்கெட் வாங்கிக் கொண்டு வந்தனர். பிஸ்கெட் பாக்கெட்டை பிரித்து பைரவர் களுக்கு கொடுக்க, அவர்களோ அதை திரும்பிக்கூட பார்க்காமல் குருவின் பின்னே நடந்து கொண்டே இருந்தார்கள்.

பக்தர்கள் இருவரும் எவ்வளவோ முயன்றும் பைரவர்கள் இருவரும் ஒரு பிஸ்கெட்டைக் கூட வாங்கவில்லை. உடனே பக்தர்கள், குருவே நீங்கள் கொடுத்தால் தான் வாங்கும் போல் இருக்கின்றது. நீங்களே கொடுங்கள் என்று கூற,

அவர்களை திரும்பிப் பார்த்த குரு, "இந்த பைரவர்கள், நீங்கள் போடும் பிஸ்கெட்டுக்காக உங்கள் பின்னால் வருகின்றார்கள் என்று நினைத்தீர்களா" என்றபோது நான் குருவைப் பார்த்தேன். அவரின் கண்கள் பைரவரின் கண்களைப்போல் ஜொலித்தன. மேலும் குரு அவர்கள், பிஸ்கெட் போடுவதை விட்டுவிட்டு, பைரவர்கள் வடிவில் இருக்கும் அவர்களை யார் என்று அறிய முற்படுங்கள். என்று கூறிவிட்டு தொடர்ந்து நடந்தார்.

நாங்கள் அனைவரும் சிவநேசன் சமாதியை அடைந்த உடன் அதுவரை எங்களுடன் வந்த பைரவர்கள் எங்கு மறைந்தார்கள் என்று தெரியவில்லை. அதே சமயம் கடுமையான மழை பொழிய ஆரம்பித்தது. நல்ல வேளையாக மழையில் நனையாமல் அனைவரும் ஆஸ்ரமத்திற்குள் வந்துவிட்டோம்.

சிவநேசன் சமாதியில் குரு அவர்கள் சத்சங்கம் நிகழ்த்தினார்கள். பின்பு தியானம் ஆரம்பமானது. அனைவரும் எக்காரணம் கொண்டும் கண்களை திறக்காதீர்கள். நீங்கள் கண்களை மூடிய அடுத்த விநாடி பைரவர்கள் வருவார்கள். உங்களுக்கு ஆசீர்வாதம் வழங்குவார்கள் என்று கூற, அனைவரும் கண்களை மூட, அடுத்த விநாடி, வெளியே பலத்த மழை பெய்து கொண்டிருந்த போதும் எங்கிருந்தோ இரண்டு பைரவர்கள் வந்து பக்தர்களை ஆசீர்வதிக்க ஆரம்பித்தன.

குறிப்பாக அந்த பலத்த மழையில் அவை எங்கிருந்து வந்தன, எப்படி நனையாமல் வந்தன என்பது பகவான் சாயிக்கே வெளிச்சம். தியானம் முடிந்து அனைவரும் விழித்துக் கொள்ள, மழை இன்னும் விடாததால் தொடர்ந்து நான்கு மணிநேரம் குரு சத்சங்கம் செய்தார்கள். அதுவரை பைரவர்கள் அவருடனே இருந்தன.

இவை எல்லாவற்றையும் தாண்டி உச்ச நிகழ்வாக மற்றொன்றையும் பைரவர்கள் நிகழ்த்தினார்கள். ஆம்

மழை நின்று நாங்கள் புறப்படும் நேரம் சில பக்தர்கள் ஞாபக மறதியாக முகத்தில் அணியும் மாஸ்க்கை ஆங்காங்கே ஆஸ்ரமத்தில் கீழே போட்டிருக்க, பைரவர் அதை ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டு போய் குருவிடம் கொடுத்ததைப் பார்க்கும் போது, முக்த்தில் அணியும் மாஸ்க்கை கண்ட இடத்தில் போடக்கூடாது என்பதை பைரவர்கள் மனிதர்களுக்கு சொல்லிக்கொடுக்கும் நிகழ்வாக அது இருந்தது.

ஆயினும் குருவிடம் ஒன்று மட்டும் எனக்கு புரியாத புதிராக இருந்தது. ஊரில் இருக்கும் போது, இன்று வரை அவர் பைரவர்களிடம் பழகியதே இல்லை. அவரிடமும் பைரவர்கள் வந்ததும் இல்லை. நான் ஒருமுறை இதைப்பற்றி கேட்டதற்கு, எனக்கு பைரவர் என்றால் பயம். நான் அதற்கு பக்கத்தில் கூட போக மாட்டேன் என்று கூறியிருக்கிறார். ஆனால் சீரடியில் அவரும் பைரவரும் பழகும் விதம் எனக்கு இன்றுவரை ஆச்சர்யம்தான்.

அடுத்து தொடர்ந்து ஒரு மாதம் முழங்கால் வலியால் அவதிப்பட்ட குரு சீரடியில் சென்று பாபாவை தரிசனம் செய்த விநாடியில் வலிநீங்கி குணமடைந்த அற்புத லீலையை அடுத்தமாதம் கூறுகிறேன்.

– லீலைகள் தொடரும்...



பைரவ சாய் பீடம்

மேல காரைக்காடு, திருநாராயணபுரம் - 621203
தொட்டியம் வட்டம், திருச்சி மாவட்டம், தமிழ்நாடு
Cell : + 91 9976919106, 6380762294, www.bairavasaipeedam.com

கெடு பலன்களை குறைக்கும் - கார்ய தடைகளை நீக்கும் – வாழ்வில் சுபிட்ஷங்களை உண்டாக்கும்

ஜென்ம நட்சத்திர துனி ஹோமம்

கணபதி ஹோமம் – நவகிரஹ ஹோமம் – சத்ய நாராயணா ஹோமம் – லலிதா ஹோமம் – ஹனுமான் ஹோமம் – நரசிம்மர் ஹோமம் – லட்சுமி ஹயக்ரீவர் ஹோமம் – அஷ்ட பைரவ ஹோமம் – சொர்ண பைரவ ஹோமம் – லட்சுமி குபேர ஹோமம் – ருத்ர ஹோமம் - ம்ருத்யுஞ்சாய ஹோமம் – தன்வந்தரி ஹோமம் – ஆயுஸ் ஹோமம் ஆகிய எண்ணற்ற ஹோமங்களின் பலனை ஒரு சேர பெற்றிட உங்கள் பிறந்த ஜென்ம நட்சத்திர தினத்தன்று சாய் துனி ஹோமம் செய்து பலன் பெறுங்கள்.

இத்துடன் அந்ததந்த நட்சத்திரத்திற்குரிய அதி தேவதை மந்திரம் – நட்சத்திர சிவ மந்திரம் – நட்சத்திர மந்திரம் மற்றும் நட்சத்திர சித்தர்கள் மந்திரங்கள் முதல் கொண்டு சிறப்புடன் இந்த ஹோமம் தினசரி நடத்தப்படுகிறது

மாத காணிக்கை ஒரு குடும்பத்திற்கு மாதம் ரூ ***. (1 பேர் மட்டும்) முன் பதிவிற்கு 9976919106 என்ற வாட்ஸ்அப் எண்ணிற்கு "துனி ஹோமம்" என மேசேஜ் மட்டும் செய்து விபரங்கள் பெற்றுக் கொள்ளவும்

உங்கள் வாழ்வில் தொடர் துன்பம் வறுமை நோய் கடன் திருமணம் புத்திரபாக்கியம் கணவன் மனைவி வேலை தொழில் பிரச்சனையா? கவலையே வேண்டாம். ** நாட்களில் மாற்றம் முன்னேற்றம் வெற்றி காண பைரவ கல்பம் மற்றும் கற்பகதரு மஹா பைரவ சாய் கவச மந்திரம் உபதேசம் பெற்றிடுவீர்

ஏழரை சனி ஜென்ம சனி பாத சனி விரைய சனி அட்டம சனி அர்த்தாஸ்ட்டம சனி கண்ட சனி சனி புத்தி சனி திசை நடப்பவர்களுக்கான பாதுகாப்பு கவசம். தலைக்கு வருவதை தலைப்பாகையோடு போகச் செய்யும். பொருள் சேதம் உயிர் சேதம் தவிர்க்கும். விபத்து கண்டங்களில் இருந்து பாதுகாக்கும் உபதேசம் இது

வாழ்வில் தீராத பிரச்சனைகளை தீர்க்கும் வரும் பிரச்சனைகளை தடுக்கும் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றும் வாழ்க்கைக்கு தேவையான சரளமான புண புழக்கத்தினை ஏற்படுத்தும் வாழ்நாள் முழுவதும் பாதுகாப்பு வளர்ச்சி தரும் கர்மாவையும் குறைத்து விதியினையும் மாற்றி முக்திக்கு அழைத்துச் செல்வும் பைரவ கல்பம் மற்றும் கற்பகதரு மஹாபைரவ சாய் கவச மந்திரம் உபதேசம்

உபதேசம் பெற 9976919106 என்ற வாட்ஸ்அப் எண்ணிற்கு "பைரவ கல்பம்" என மேசேஜ் மட்டும் அனுப்பி உபதேசம் பெற்றுக் கொள்ளலாம். இது இலவச சேவையே

கந்த சஷ்டி கூறும் "உண்ணா நோன்பு"

வருடத்தில் 365 நாட்களும் நமது இரைப்பை இயங்கிக்கொண்டே இருக்கிறது. இதற்கு சற்று ஓய்வு கொடுத்தால் உடலின் இயக்கங்கள் சீராகி பலவிதமான உடல்நோய்கள் நம்மை விட்டை போய்விடும்.

நமது உடலை இயக்கும் 'உயிர்சக்தி' மூன்று சக்திகளாக பிரிந்து வேலை செய்து வருகிறது. உடல் ஒரு நேரத்தில் ஒரு வேலை தான் செய்யும், அதை துல்லியமாக செய்து முடிக்கும்.

நமது உடலை இயக்கும் அந்த மூன்று சக்திகள் 1.செரிமான சக்தி, 2. இயக்க சக்தி, 3.நோய் எதிர்ப்பு சக்தி, இவை ஒவ்வொன்றாக எப்படி வேலை செய்கிறது என்று சிறிய உதாரணத்துடன் பார்க்கலாம்.

காய்ச்சலின் போது உங்களுக்கு பசிக்குமா? பசிக்காது, ஏன் என்றால் உடலின் செரிமான சக்தி வேலை செய்யாது. காய்ச்சலின் போது உங்களால் வேலை செய்ய முடியுமா? முடியாது, உடல் இயக்க சக்தியை குறைத்துக்கொள்ளும். எனவே இந்த இரண்டு சக்தியும், நோய் எதிர்ப்பு சக்திகளாக மாறி உங்கள் உடலில் உள்ள கழிவுகளை வெளியேற்ற உதவி செய்யும்.

மதியம் அதிக உணவு எடுத்துக் கொண்டீர்கள், உடனடியாக வேலை செய்ய முடியுமா? முடியாதல்லவா, உடல் இயக்கம் சக்தியை குறைத்துக் கொள்ளும், நோய் எதிர்ப்பு சக்தி வேலை செய்யாது.

இப்பொழுது செரிமானம் மட்டுமே வேலை செய்யும். உண்ணா நோன்பு இருக்கிறீர்கள். செரிமான சக்திக்கு வேலை இருக்கிறதா ? இல்லை. இயக்க சக்தியையும் குறைத்துக்கொள்வோம்.

இப்பொழுது செரிமானம் மற்றும் இயக்க சக்திகளுக்கு வேலை இல்லாததால், இதன் சக்திகள், நோய் எதிர்ப்பு சக்திகளாக மாறி நமது உடலில் உச்சி முதல் பாதம் வரை, எங்கு? என்ன? பிரச்சனை இருந்தாலும் குணப்படுத்திவிடும்.

இப்படி மூன்று சக்திகளும் அந்தந்த நேரத்தில், மற்ற இரண்டு சக்திகளிடம் இருந்து சக்திகளைப் பெற்று, மாறி மாறி வேலை செய்து கொண்டே இருக்கும்.

உடல் முதல் முக்கியத்துவம் செரிமானத்திற்கு கொடுப்பதால் ஒவ்வொறு முறை நாம் உணவு எடுக்கும் போது, உடல் என்ன வேலை செய்து கொண்டிருந்தாலும் அதை விட்டுவிட்டு, சக்தி செரிமானத்திற்கு வந்துவிடும். ஏனென்றால் வெளியில் இருந்து ஒரு பொருள் வருகிறது, அது என்ன ஏது என உடல் பார்த்து சீரமைக்க வேண்டும்.

உண்ணா நோன்பு இருக்கும் போது செரிமான சக்திக்கு அதிக வேலை இருக்காது, எனவே இதன் சக்தியும், ஓய்வில் இருந்தால் இயக்க சக்தியும் நோய் எதிர்ப்பு சக்திகளாக உருமாறும். இதனால் உடலின் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து பிரச்சனைகள் அனைத்தும் சரி செய்யப்படுகிறது.

உண்ணா நோன்பு இருப்பதால், உடல் ஆரோக்கியம் பெறும் என்பது அறிவியல்

உண்மை.இதற்காக நமது முன்னோர்கள் வருடத்தில் ஆறு நாட்களை தேர்வு செய்து வைத்துள்ளார்கள். அந்த ஆறு நாளும் ஆறுமுகனை மையப்படுத்தி அழகான ஒரு திருவிழாவாக வடிவமைத்து கொடுத்துள்ளனர்.

கந்த சஷ்டி விழா என்றாலே நமது நினைவிற்கு வருவது சஷ்டி விரதம் தான். 'செரிமான சக்தி' தான் 'முருகனின் தாய்'. 'நோய் எதிர்ப்பு சக்தி' தான் 'முருகன்'. 'நோய்' தான் 'அரக்கன்'.

வெளியில் நடக்கும் அதே போர் நமது உடலிலும் நடக்கிறது. இந்த விழாவில் எப்படி 'முருகப்பெருமான்' தவம் மேற்கொண்டு, தனது தாயிடம் இருந்து சக்தி(வேல்) பெற்று அசுரனை வதம் செய்கிறாரோ, அதைப் போலவே நமது உடலில் உள்ள *நோய் எதிர்ப்பு சக்தி* தனது தாயான செரிமான சக்தியிடம் இருந்து சக்தி பெற்று நோய்களை வதம் செய்கிறது.

எப்படி ஒவ்வொரு நாளும் 'முருகன்' சக்தி பெற்று ஆறாவது நாள் அசுரனை வதம் செய்கிராறோ, அதேப்போல் தான் ஒவ்வொரு நாளும் நமது 'நோய் எதிர்ப்பு சக்தி' வலிமையடைந்து தற்காலத்தில் வருவது போன்ற எந்த வைரஸ் கிருமிகள், நோய்கள்' இருந்தாலும் வதம் செய்துவிடும்.

உடலில் நடக்கும் இந்த அறிவியல் உண்மையை நமக்கு சூட்சமமாக உணர்த்துவதற்காகவே, ஆறு நாட்களையும் உண்ணா நோன்புடன், அழகான விழாவாக வடிவமைத்து கந்த சஷ்டி விரதம் என்று வழங்கியுள்ளார்கள்.

<u>சரி, எப்படி உண்ணா நோன்பு இருப்பது?</u>

1 .உங்கள் ஊர் வழக்கப்படி இருக்கலாம். 2 .சமய முறைப்படி இருக்கலாம். 3.ஆறு நாளும் தண்ணீர் மட்டும் குடித்து இருக்கலாம். 4.ஆறு நாளும் பாலும், பழமும் மட்டும் உண்டு இருக்க லாம்.5.ஆறு நாளும் பழங்களை மட்டும் உண்டு இருக்கலாம்.

இதில் உங்களுக்கு பழக்கம் இருக்கும் முறை எதுவோ, அந்த முறைப்படி இருக்கலாம். சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் நான் பரிந்துரைக்கும் எளிய முறை என்னவென்றால். பசித்தால் தண்ணீர் மட்டும் குடித்து வாருங்கள், பசி அடங்கிவிடும். திரும்ப பசித்தால் திரும்ப தண்ணீர் குடியுங்கள், பசி அடங்கிவிடும். திரும்ப பசித்தால் திருப்ப தண்ணீர் குடியுங்கள், பசி அடங்கிவிடும்.

இது தொடரட்டும் ஒரு கட்டத்தில் பசிக்கும் போது தண்ணீரை கண்டாலே உங்களுக்கு பிடிக்காது, குடிக்கவும் முடியாது, எதாவது சாப்பிட தோன்றும் அப்பொழுது உங்களுக்கு பிடித்த பழங்களை ரசித்து ருசித்து உமிழ்நீர் கலந்து சாப்பிடுங்கள். வேளை கணக்கு எல்லாம் கிடையாது. பசிக்கும் போது சாப்பிடலாம். இதேப்போல் ஆறு நாட்களும் இறைவன் சமைத்த உணவை மட்டும் சாப்பிட்டு வரலாம்.

இறைவன் சூரிய அடுப்பை கொண்டு சமைத்த உணவான பழங்களை நாம் அதிகம் சாப்பிட இந்த ஆறு நாள் நமக்கு ஒரு அரிய வாய்ப்பாக அமைகிறது. வேலைக்கு செல்வோருக்கு, வேறு உணவு தேவைப்பட்டால், தேங்காய், வேர்கடலை சாப்பிடலாம், இதனால் நீண்ட நேரம் வேலை செய்ய முடியும்.

எதையெல்லாம் நாம் சமைக்காமல் அப்படியே சாப்பிட முடியுமோ அதை எல்லாம் சாப்பிடலாம். பழங்கள், இள நீர், நாட்டு காய்கனிகள், தேங்காய், வேர் கடலை

என பச்சையாக சாப்பிடக்கூடிய உண வுகளை மட்டும் ஆறு நாட்கள் எடுக்கலாம்.

உடலில் பல்வேறு பிரச்சனை உள்ள வர்கள், ஆங்கில மருந்து எடுப்பவர்கள், நோயாளிகள், ஆறு நாள் பழங்களை மட்டும் எடுக்க முடியாதவர்கள் எல்லாம் தேவைப் பட்டால் இதனுடன் பட்டை தீட்டப்படாத அரிசி கஞ்சி, நீராகாரம், அவல், நாட்டு பசும் பால் போன்ற உணவுகளை எடுத்துக்கொள்ளலாம்.

நோன்பின் போது உங்கள் உடலில் இவை எல்லாம் நடக்கும். ஆண்டுக் கணக்கில் தேங்கிய நச்சுக்கழிவுகள் வெளியேறலாம். சிறுநீர் அடர்த்தி நிறமாக வெளியேறலாம், மலம் கருப்பாக வெளியேறலாம், சளி வெளியேறலாம், உடல் ஒய்வு கேட்கலாம், காய்ச்சல் வரலாம் (காய்ச்சல் ஒரு கொடை).

எத்தகைய நன்மை தரும் மாற்றங்களை உங்கள் உடலில் எதிர்பார்க்கலாம், 1.அதிக உடல் எடை சீராகும், 2.முகம் பொழிவு பெறும் 3.கண்ணில் ஒளி வீசும், 4.சுறுசுறுப்பு அதிகரிக்கும், 5.இரத்தம் தூய்மை பெறும், 6.தோலின் நிறம் சீராகும், 7.மன உளைச்சல் குறையும், 8.கவலை, பயம், கோபம் குறையும், 9.புத்துணர்வு கிடைக்கும், 10.உடல் பலம் பெறும், 11.மன அமைதி பெறும், 12.ஆழ்ந்த தூக்கம் வரும். ஆக மொத்தத்தில், உடலில் ஆரோக்கியமும், எண்ணத்தில் அழகும்,

மனதில் நிம்மதியும் கிடைக்கும். நீங்கள் எதிர்பார்க்காத இன்னும் பல எண்ணிலடங்கா அதிசயங்கள் நிகழலாம். கந்தன், அரக்கனை அழிப்பது போல்



உடல், உங்கள் அனைத்து பிரச்சனைகளை அழித்துவிடும். நமது பண்பாட்டையும், உடல், மன ஆரோக்கியத்தையும் பிரித்தே பார்க்க முடியாது.

இவை இரண்டும் ஒன்றை ஒன்று பின்னிபினைந்தவை. பினைக்கப்பட்டவை. உடலின் பேராற்றலை புரிந்து, அதன் அற்புத புதையல் கொண்ட அறிவியல் உண்மைகளை, அழகான திருவிழாவாக நமக்கு வடிவமைத்து தந்த நமது முன்னோர்களுக்கு கோடி நன்றிகளை சொல்ல நாம் அனைவரும் கடமைப்பட்டுள்ளோம்.

உலகில் மிகச்சிறந்த மருந்துவர் உங்கள் உடல். உலகில் மிகச்சிறந்த மருத்துவம் உண்ணாநோன்பு.

உண்ணாநோன்பு (சஷ்டி விரதம்) இருப்போம். ஆரோக்கியமாக வாழ்வோம்.

வாழ்க வளமுடன்!

வாழ்க வையகம்!

தொடர் –52

குருவைத் தேடி

சுவாமிகள் சமாதியடைந்து விட்டார் என்பதை கூறி, சுவாமிகளுக்கும், எனக்கும் உள்ள தொடர்பை பற்றி விளக்கிவிட்டு, சுவாமி யோகானந்தருடன் எனக்குண்டான ஒரு தொடர்பை பற்றிக் கூறினேன்.

சிறுவயதில் திருவண்ணாமலை இரமணாஸ்ரமத்தில் கனடாவைச் சேர்ந்து துறவி ஒருவருடன் பேசிக் கொண்டிருந்த போது, எனது மெய்ஞானத்தேடுதலை உணர்ந்து கொண்ட அவர் ஸ்ரீ யோகானந்த பரமஹம்சருடைய "ஒரு யோகியின் சுய சரிதையை" என்ற நூலை படிக்குமாறு அறிவுறுத்தினார்.

அதற்குப் பிறகு நானும் அந்த நூலை தேடினேன். ஆனால் அது ஆங்கிலத்தில் மட்டும் தான் கிடைத்தது. எனக்கு ஆங்கிலம் தெரியாததால் என்னால் அதை படிக்கமுடிவில்லை. அதன் பின்னர் சில வருடங்களுக்கு பின்பு ஒரு யோகியின் சுய சரிதம் நூலின் தமிழ் பதிப்பு வெளிவந்தது. ஆனால் அப்போது நான் அந்தப் புத்தகத்தை விலை கொடுத்து வாங்கக்கூடிய நிலையில் இல்லை.

அதற்காக நான் மிகவும் மனம் வருந்தியிருக்கின்றேன். அதற்குப் பின்பு கடந்த பல ஆண்டுகளாக பொருளாதாரத்தில் நல்ல நிலையில் இருக்கின்றேன். ஆனால் அந்தப் புத்தகத்தை தேடவோ, வாங்கவோ



நான் முயற்சிக்கவில்லை. அந்தளவிற்கு பொருளாதார மாயை என்னை மயக்கிவிட்டது என்று வருத்தப் பட்டேன்.

வறுமையான காலகட்டத்தில் எவ்வளவு சிரமங்கள் வந்தாலும் அதை ஏற்றுக் கொண்டு நமக்கு பிடித்த செயலை செய்து கொண்டு பட்டினியால், கண்களின் ஓரம் நீர் கசிய அப்படியே உறங்குவது ஒரு சுகம். அது அலாதியானது. இப்போது எவ்வளவு

சம்பாதித்தாலும் அந்த ஏழ்மையின் சுகத்திற்கு ஈடாகாது. அதைப் இப்போது இழந்துவிட்டதுபோல் மிகவும் வருத்தப்பட்டேன்.

ஜெகதீஷ் என்னை தேற்றினார். கவலைப்படாதீர்கள். நீங்கள் எவ்வளவு சம்பாதித்தாலும் உங்களது இயல்பு தன்மை மாறவில்லை. அந்த மனதை கொடுத்த ஆண்டவனுக்கு நீங்கள் நன்றி கூற வேண்டும். அந்த புத்தகத்தின் தமிழ் பதிப்பு எங்கிருந்தாலும் நானே ஆர்டர் பண்ணி வாங்கித்தருகின்றேன். என்று எனக்கு வாக்களித்தார்.

எனக்குள் மறைந்திருந்த தேடுதல் விழித்துக் கொண்டது. எனது ஆன்மீகப் பயிற்சிகளை வெகுநாட்களுக்குப் பிறகு மீண்டும் தொடங்கினேன். சற்குருவை காண வேண்டும் என்ற தாகம் அதிகரிக்கத் தொடங்கியது.

அடுத்து வந்த ஒரு வாரத்திலேயே ஜெகதீஷ் என்னுடன் மிகவும் நெருங்கி விட்டார். எங்களது அலுவலக வேலை போக மற்றைய நேரங்களில் ஆன்மீகம் பேசுவதே எங்களுக்கு வாடிக்கையாகிப் போனது. அடுத்து வந்த ஆறு மாதங்கள் வியாபாரமும் மிகச்சிறப்பாக நடந்து வந்தது.

அதன் பிறகு மகாராஷ்டிர மாநிலத்தின் பருவநிலை பொய்த்துப் போனதால் விவசாய விளை பொருட்களின் மகசூல் குறைந்து போனது. எனவே வியாபாரம் முன்பு போல் இன்றி மிகவும் மோசமடைய ஆரம்பித்தது. இதன் விளைவால் எங்களுக்கு ஆன்மீகம் பேச அதிக நேரம் கிடைக்கலாயிற்று.

ஜெகதீஷ் அவர்கள் அதிர்ஷ்டவசமாக ஓர் முறை இமயமலையில் இருக்கும் துணகிரி மலைக்கு செல்ல நேர்ந்ததாகவும் அங்கிருக்கும் மகா அவதார் பாபாஜி குகைக்கு சென்றபோது அங்கே ஏசு நாதரின் புகைப் படம் இருப்பதை கண்டு ஆச்சர்யமடைந்ததாகவும், ஏசு கிருஷ்ஸ்துவிற்கும், பாபாஜிக்கும் என்ன தொடர்பு என்று கேட்டார்.

பாபாஜிக்கும், ஏசுவிற்கும் உள்ள தொடர்புகளைப்பற்றி எனக்கு தெரிந்தவற்றை எல்லாம் எடுத்துக் கூறி, அவர் தனது 13 வயதில் இருந்து 30 வயது வரை இந்தியாவில் தான் ஆன்மீகப் பயிற்சி எடுத்துக்கொண்டார் என்பதைப்பற்றியும், ஏசுவிற்கும் நமது முருகனின் அறுபடை வீட்டிற்கும், நமது தமிழ் சித்தர்களுக்கும் உள்ள தொடர்பை விவரித்தேன்.

ஜெகதீஷ் அதை ஏற்றுக்கொள்ளாமல் என்னிடம் வாதம் செய்தார். நான் அதை மறுக்காமல் காலம் உங்களுக்கு பதில் சொல்லும் என்று கூறி அவ்விவாதத்தை முடித்தேன்.

சில மாதங்கள் சென்றது ஜெகதீஷ் புதிய பைக் ஒன்றை வாங்கியிருந்தார். எங்காவது நீண்ட தூரம் பிரயாணம் சென்று வரலாம் என்று என்னை அழைக்க, எங்கு செல்லலாம் என்று யோசித்தோம்.

நடிகர் திரு. ரஜினிகாந்த் அவர்கள், அவரது நண்பர் ஸ்ரீஹரியுடன் இணைந்து சென்னை புறநகர் பகுதியான படப்பை அருகே மகா அவதார் பாபாஜிக்காக ஓர் ஆஸ்ரமம் கட்டியிருக்கின்றார். என்பதை கேள்விப்பட்டிருந்தோம். சரி அங்கேயே செல்லலாம் என்று அன்றைய வேலைகளை சீக்கிரமாக முடித்துக்கொண்டு காலையில் பத்து மணிக்கெல்லாம் புறப்பட்டு புதிய வாகனத்தில் படப்பை சென்றோம்.

படப்பை பேரூந்து நிலையத்தின்

அருகே வந்து பலரிடம் விசாரித்தோம். ஒருவருக்கும் தெரியவில்லை. இருபது வருடங்களுக்கு முன்பாக என்பதால் மக்களுக்கு பாபாஜி பற்றி அதிகம் தெரிந்திருக்கவில்லை. நாங்களும் அலுத்துப் போய் விட்டோம். மணிவேறு மதியம் இரண்டாகி விட்டது. சரி எங்காவது உணவருந்திவிட்டு திரும்பிவிடலாம் என்றவாறு ஒரு சிறிய உணவகத்தில் உணவருந்திவிட்டு வெளியே வந்து நின்று பேசிக் கொண்டிருந்தோம்.

அப்போது பிச்சைக்காரர் ஒருவர் எங்களை நோக்கி வந்து எங்களிடம் பிச்சை கேட்டார். ஜெகதீஷ் அவருக்கு பத்து ரூபாய் தர பணத்தை வாங்கிக்கொண்ட அவர் எங்களை நோக்கி, பாபாஜி கோவிலுக்கா போறீங்க, அதோ அந்த பூக்கடையில உட்கார்ந்திருக்கானே ஒரு சின்னப் பையன் அவனிடம் கேளுங்க அவனுக்குத்தான் வழி தெரியும் என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

அவர் கூறியதை கேட்ட ஜெகதீஸ், நாம் பாபாஜி ஆஸ்ரமத்திற்கு போவது அந்த பிச்சைக்காரனுக்கு எப்படி தெரியும் என்று வியந்தார். எனக்கு ஏற்கனவே இதுபோன்ற அனுபவங்கள் இருப்பதால் பதறாமல் அவருக்கு சில விளக்கங்களை அளித்தேன்.

மகான்களை நாமாக தேடிப்போ காமல், அவர்களாக நம்மை அழைக்கி றார்கள் என்றால், இதுபோன்ற லீலைகள் நடப்பதும், அதன்மூலம் அவர்களது இருப்பிடம் தெரியாமல் தடுமாறும் நமக்கு, அவர்களது இருப்பிடங்களை அடையாளம் காட்டுவதும் இயல்பானது தான் என்று அவருக்கு விளக்கிவிட்டு, வாருங் கள் அவர் கூறியதைப்போல் அந்த பூக்கடைகாரரிடம் விசாரிப்போம்



என்றேன்.

நாமாகத்தானே தேடி வந்திருக்கி றோம். அவர்கள் எங்கே நம்மை அழைத்தார் கள் என்றார் ஜெகதீஷ். நாமாக தேடிவந்தோம் என்றால் அது அகங் காரம். அவர்கள் அழைத்ததால் தான் நாம் வந்தி ருக்கின்றோம். தவிர அவர்கள் அழைத்ததினால்தான் இதுபோன்ற உதவிகள் நமக்கு கிடைக் கின்றன. இல்லை என்றால் கிடைக்காது என்றேன்.

அவர் சுட்டிக்காட்டிய எதிர்புறத்தில் ஒரு பூக்கடை இருந்தது. அதில் ஒரு 15 வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவன் பூக்கட்டிக்கொண்டு இருந்தான். அவனிடம் சென்று தம்பி இங்கு மகா அவதார் பாபாஜி ஆஸ்ரமம் எங்கே இருக்கிறது என்று கேட்டேன். அவனோ,இங்கிருந்து மூன்று கிலோ

மீட்டர் தூரம் சென்றால் சாலமங்கலம் என்ற ஊர் வரும். அங்கிருந்து இரண்டு கிலோ மீட்டர் தூரம் வரை ஒரு ஒத்தையடிப்பாதை செல்லும். அதிலேயே சென்றால் ஆஸ்ரமம் வந்து விடும் என்றான்.

சரி என்றபடி நாங்கள் வண்டியை எடுத்துக்கொண்டு சில நூறு அடி கள்தான் சென்றிருப்போம். வண்டியை நிறுத்திய ஜெகதீஷ். அண்ணா, வழிகூறிய அந்த பையனுக்கு நாம் ஏதும் உதவ வில்லையே, அவனிடம் ஆஸ்ரமத்திற்கு பூவாவது வாங்கிக்கொள்வோம். என்றபடி வண்டியை திருப்பி மீண்டும் பூக்கடையில் நிறுத்தினார்.

வண்டியை விட்டு இறங்கிய நான் அந்த சிறுவனிடம் சென்று தம்பி 10 ரூபாய்க்கு பூ கொடு என்று கேட்க, அந்த சிறுவனும் பூவை கட்டிக் கொடுத்தான். நான் 100 ரூபாய் பணத்தை கொடுக்க, அவனோ சைகை செய்து ஊமை பாசையில் சில்லரை இல்லை என்று கூற, எனக்கும், ஜெகதீஷ்க்கும் சந்தேகம்.

டேய், தம்பி இப்பதானே எங்களுக்கு பாபாஜி கோவிலுக்கு வழி சொன்னே, அதற்குள் ஊமை மாதிரி நடிக்குறே என்று ஜெகதீஷ் அவனிடம் சற்று கோபமாகக் கேட்டார். அந்தப் பையன் எங்களை இதற்கு முன்பு பார்த்ததே இல்லை என்பதைப் போன்று பார்த்தான்.

எனக்கும் ஒன்றும் புரியவில்லை. ஆனால் ஏதோ ஒரு சூட்சும சக்தி வேலை செய்கின்றது என்பதை மட்டும் உணர்ந்தேன். ஆனால் ஜெகதீஷ்க்கு அவன் நம்மிடம் நடித்து நம்மை கேலி செய்கின்றான் என்று கோபம் வந்து விட்டது. வண்டியைவிட்டு கீழிறங்கி அவனிடம் சண்டைக்குப் போய்விட்டார்.


இவர் சத்தம் போட்டதைப் பார்த்துக் கொண்டிருந்த அருகில் உள்ளவர்கள் ஓடிவந்தனர். என்ன பிரச்சனை என்று கேட்டவர்களிடம், ஜெகதீஷ், இவன் எங்களை முட்டாள் ஆக்கப் பார்க்கின்றான். இரண்டு நிமிடத்திற்கு முன்பு எங்களிடம் நன்றாகப் பேசினான். இப்போது ஊமை போன்று நடிக்கின்றான். என்றார்.

அதற்கு அருகில் இருந்த பெரியவர் இவனா பேசினான். இவன் பிறந்ததில் இருந்தே எனக்குத் தெரியும். இவன் பிறவி ஊமையாச்சே! இவன் எப்படி உங்களிடம் பேசினான் என்றார். அருகில் இருந்தவர்களும் அதையே கூறினார்கள்.

எங்களுக்கு மிகவும் ஆச்சர்யமாக இருந்தது. நாங்கள் பொறுமையாக அவன் பாபாஜி ஆஸ்ரமத்திற்கு வழி கூறி பேசியதை கூறினோம். அவர்கள் எங்களைதான் சந்தேகத்துடன் பார்த்தார்கள். வேறு வழியே இல்லாமல் நாங்கள் அவர்களிடம் இருந்து விலக வேண்டியிருந்தது.

ஒருவழியாக குண்டும்குழியுமான தார் ரோட்டில் பயணித்து சாலமங்கலம் வந்தோம். அங்கிருந்து பலரிடம் விசாரித்துக் கொண்டே மாலை 5 மணிக்கு பாபாஜி ஆஸ்ரமம் வந்து சேர்ந்தோம்.

ஆஸ்ரமம் விவசாய நிலங்களுக்கு இடையே சிறிய அளவில் இருந்தது. வட்ட வடிவிலான சிறிய தியான மடம் ஒன்றும் அதற்கு அருகில் கெஸ்ட் அவுஸ் ஒன்றும் இருந்தது. ஆஸ்ரமத்தை சுற்றி முள் வேலி போடப்பட்டு, வெளிக் கதவு வெறுமனே சாத்தியிருந்தது. மனிதர்கள் யாரும் தென்படவில்லை. சற்று தூரத்தில் வாகனத்தை நிறுத்திவிட்டு, மெல்ல நடந்து வந்தோம்.



அருகில் வந்து சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, மெதுவாய் கதவை தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தோம். உள்ளே நாங்கள் கண்ட காட்சி எங்களுக்கு ஆச்சர்யத்தை அளித்தது. ஆஸ்ரமத்தின் நுழைவு வாயிலில் ஏசுநாதரின் பெரிய படத்தை வைத்து அலங்கரித்து ஊதுபத்தி கொளுத்தி வைக்கப்பட்டிருந்தது.

நானும், ஜெகதீசும் இதுபற்றி ஏற்கனவே விவாதித்திருந்தாலும், ஜெகதீசுக்கு இது ஆச்சர்யத்தை ஏற்படுத்தியது. சற்றுநேரத்திற்குப் பின்தான் அன்று கிருஷ்துமஸ் தினம் என்பது எங்களுக்கு ஞாபகம் வந்தது. ஏசுபிரானை வணங்கிவிட்டு, ஆஸ்ரமத்திற்குள் நுழைந்தோம். ஒருவரையும் காணவில்லை.

அது ஒரு 50 சதுர அடி கொண்ட சிறிய வட்ட வடிவமான அறை. அதில் நடுநாயகமாக பாபாஜியின் புகைப்படம் இருக்க, அருகில் லஹரி மகாசாயர், யுக்தேஸ்வர் கிரி, யோகானந்தனர் ஆகியோரின் புகைப்படங்கள் அருள் பாலித்தன. நாங்கள் அமைதியாக அமர்ந்து நீண்ட நேரம் தவம் புரிந்தோம்.

தவத்தில் இருந்து கண்விழித்தபோது இரவு மணி 7 ஆகியிருந்தது. மெதுவாக எழுந்து கொண்டு பாபாஜியை வணங்கி எழுந்தோம். அப்போதுதான் நானும் ஜெகதீசும் ஒருசேர அதைப் பார்த்தோம். பாபாஜியின் புகைப்படத்திற்குக் கீழே ஒரு கண்ணாடிப் பெட்டியில் ஒரு புத்தகம் மட்டும் இருந்தது.

நான் சட்டென்று அருகில் சென்று கவனித்தேன். அது ஒரு யோகியின் சுய சரிதம் தமிழ் புத்தகம். எனக்கு மிகவும் ஆனந்தம் ஆகிப்போனது. என்னையறியாமல் பகவானே என்று கத்திவிட்டேன். ஓடிவந்த ஜெகதீஷ் என்னவென்று கேட்க நான் அந்தப் புத்தகத்தை சுட்டிக் காட்டினேன்.

அவருக்கும் ஆனந்தம். நான் வாக்களித்தது போல் அந்த புத்தகத்தை நானே வாங்கித்தருகிறேன். என்றவாறே அந்த கண்ணாடிப் பெட்டியை திறந்து உள்ளிருந்து அந்தப் புத்தகத்தை வெளியே எடுத்தார். இப்போது அதை யாரிடம் இருந்து வாங்குவது. இங்கு ஒருவரையும் காணவில்லையே! என்றவாறே

புத்தகத்தை இறுக்கி அனைத்தவாறு ஆஸ்ரமத்தை சுற்றித் தேடுகின்றோம் ஒருவரையும் காணவில்லை.

எனக்கோ நான் பலகாலம் படிக்க வேண்டும் என்று நினைத்திருந்த பொக்கிஷமான புத்தகம் கையில் கிடைத்தும் ஆட்கள் யாருமில்லாத காரணத்தால் அதை சொந்தமாக்கிக் கொள்ள முடியாமல் போய் விடுமோ என்ற பதட்டம். நாங்கள் இருவரும் கெஸ்ட் அவுஸ் வரை சென்று தேடிவிட்டு, சற்றே ஏமாற்றத்துடன் மீண்டும் ஆஸ்ரமத்திற்குச் சென்று பாபாஜியை வணங்கிவிட்டு புத்தகத்தை கண்ணாடிப்பெட்டிக்குள் வைக்கப் போனோம்.

கண்ணாடிப் பெட்டிக்குள் ஒரு வெள்ளை பேப்பர் நான்காக மடித்து கிடந்தது. அதை எடுத்து விட்டு அதற்குள் புத்தகத்தை வைத்து விட்டு எதார்த்தமாக அந்த வெள்ளைப் பேப்பரை பிரித்தால் அதில், இந்த புத்தகத்திற்குண்டான தொகையை கண்ணாடிப் பெட்டிக்குள் வைத்துவிட்டு புத்தகத்தை எடுத்துக் கொள்ளலாம் என்று எழுதியிருந்தது.


நான் அதை வாய்விட்டு படித்ததும் ஜெகதீஷ் உடனே புத்தகத்தை மீண்டும் கைகளில் எடுத்து அதன் விலையைப் பார்த்தார். ரு.125 என்று இருந்தது. உடனே அந்தத்தொகையை அவரே வைத்து விட்டு புத்தகத்தை எடுத்து என்னிடம் அளித்தார். நான் அதை மிகவும் ஆனந்தமாகப் பெற்றுக் கொண்டேன்.

எனக்கென்னவோ பாபாஜியே எனக்கு "ஒரு யோகியின் சுய சரிதம்" புத்தகத்தை அளித்ததுபோல் இருந்தது. பிறகு இருவரும் நடந்தவைகளை வியந்தபடி பேசிக்கொண்டு இரவு 10க்கு ஊர்வந்து சேர்ந்தோம்.

- (தொடரும்...)

பாபா சமைத்த அடுப்பு!

துவாரகாமாயி கட்டிடத்திற்குள் நுழைந்த வுடனேயே உங்களுக்கு இடதுபுறம் ஒரு அடுப்பை பார்ப்பீர்கள். இந்த அடுப்பு பாபா வாழ்ந்த காலத்தில், அவர் அன்னதானம் செய்ய உதவியாக, அவரால் ஏற்படுத்தப்பட்ட அடுப்பாகும்.



சாயிபாபா தனக்கு கிடைக்கும் தட்சி ணைப் பணத்தை கொண்டு, கடைகளுக்கு சென்று சமைப்பதற்கு தேவையான பொருட் களை வாங்கி வந்து தானே இந்த அடுப்பை மூட்டி சமைப்பார். உணவு முழுமையாக வெந்துவிட்டதா என பார்பதற்கு வசதியாக கரண்டிக்குப் பதிலாக தன் கையையே அந்த கொதிக்கும் பானைக்குள் விடுவார்.

இதை அக்காலத்தில் தமிழ்நாட்டை சேர்ந்த சிவம்மாதாயி என்ற பாபாவின் பக்தை நேரில் பார்த்திருக்கிறார். கொதிக்கும் பானைக்குள் கையை விட்டாலும் பாபாவின் கைகளில் எந்த தீக்காயமும் ஏற்பட்டதேயில்லை.

தொடர் –16

சாய் சரவணன்

"அதி தேவதை"

பாபா கூறினார். நானா, என் நெருங்கிய பக்தர்களை ஆன்மீகப் பாதையில் விரைவாக அழைத்துச் செல்லவே இராதாகிருஷ்ணமாயியை இங்கு வரவழைத்தேன்.

பாபாவின் வாக்கு காலப்போக்கில் உண்மையானது. இராதாகிருஷ்ண மாயியால் பாபாவின் பக்தர்கள் சிலர் ஆன்மீகத்தில் உயர்ந்து நிலையை அடைந்து பிறவிப்பயனைப் பெற்று ஞானியாயினர். அப்படிப்பட்ட வியப்பான லீலைகளைத்தான் இக்காவியத்தில் நாம் காணப் போகின்றோம்.

பாபாவிடம் விடை பெற்று நானா இராதாகிருஷ்ணமாயியை காணச் சென்றார். அன்னையும், நானாவும் பேசிக்கொண்டிருக்கும்போது பாபா அங்கு வந்து, இராதாகிருஷ்ணமாயிடம் "இது கலியுகம், மக்களிடம் ஜாக்கிரதையாக இரு" எனக்கூறிச் சென்றார்.

இதன் அர்த்தத்தை அன்னை அறிந்தே இருந்தாள். நானாவிற்கு ஒன்றும் புரியவில்லை. நானா ஆயியிடம் உனக்கு தேவையான உணவை நண்பர்களிடம் சொல்லி வர வைக்கட்டுமா? எனக்கேட்டார்.

இராதாகிருஷ்ணமாயியோ பசி, தாகம், தூக்கம் என எல்லா நிலைகளையும் தாண்டி ஒவ்வொரு விநாடியும் ஆத்மசுகத்தில் திளைத்துக் கொண்டிருப்பவள். இந்த நிலையை சீரடியில் பாபாவைத் தவிர வேறு ஒருவரும் அறியவில்லை.

எனவே நானாவின் கேள்விக்கான பதிலை இராதாகிருஷ்ணமாயி கூறினாள். பெரியப்பா, என்னைப் பற்றி கவலை கொள்ள வேண்டாம். பண்டரியில் வாழ்ந்த என்னை சீரடிக்கு இழுத்த என் குருமகராஜ் சாயிநாதரே எனக்கு தங்க இடம் கொடுத்தார். அவரே உண்ண உணவும் தருவார் என பரிபூரணமாக நம்புகிறேன் என்றாள்.

பிறகு நானா ஆயியிடம் இருந்து விடை பெற்றுச் சென்றார். ஆயியின் நம்பிக்கைக்கு ஏற்ப அன்றிலிருந்து ஆயி சீரடியில் வாழ்ந்த காலம் வரை சாயிநாதர் எப்போதும் தான் உண்ட மிச்சத்தை தன் பக்தர்களின் மூலமாக இராதாகிருஷ்ணமாயிக்கு அனுப்பி வைத்தார்.

பாபா ஆயிக்கு ஒரு குறிப்பை தந்தார்.

"ஆயி நான் உனக்கு தரும் இந்த பிரசாதம் எப்போது நின்று போகிறதோ, அப்போது உன் அவதார நோக்கம் நிறை வேறியது என அறிந்து கொண்டு, நீ இவ்வு லகை விட்டு உன் உலகிற்குச் செல்" என்றார்.

இது அன்னை சீரடிக்கு வந்த நாளில் இருந்து தொடங்கியது.பாபா உண்ட மிச்சத்தை மட்டுமே உண்டு வாழ்வது எப்ப டிப்பட்ட பாக்கியம். சாதாரணமாக கிட்டக் கூடியதா இந்த வாய்ப்பு. சற்குருவின் உச்சிஷ்ட பிரசாதத்தை மட்டும் உண்டு வாழ்ந்தபடி ஸ்ரீ சாயி கிருஷ்ணனை ஆரா தித்து ஆடிப்பாடி ஆனந்தமாய் இருப்பாள்.

பல சமயம் துவாரகாமாயிக்கு வந்து பாபாவின் முன்னால் துகாராம், நாமத்தேவர், ஞானத்தேவர், ஏகநாதர்,மீராபாய், ஜனாபாய், கானோபாத்ரா, போன்ற மகான்களின் அபங்கத்தை பாடி துள்ளிக் குதித்து

ஆடவும் செய்வாள். அப்படி தன்னை மறந்து துவாரகாமாயில் அன்னை ஆடுகையில் உச்ச உணர்வில் கலந்து போய் சமாதி நிலையை அடைந்து விடுவாள்.

அவளது நிலை கண்டு பாபாவின் பக்தர்களும், சீரடி மக்களும் பயப்படுவார்கள். திடீரென்று ஆடுவாள், பாடுவாள், மூர்ச்சை ஆகி கீழே சாய்வாள். அவளது பிரேம பக்தியை கண்டு ஆனந்த பரவசத்தில் அமர்ந்திருப்பார் சாயிநாதர். பக்தியே பகவானுக்கு உண்மையான நிவேதனம் அல்லவா?

மஹல்சபாபதி, நானா, போன்ற ஒரு சிலர் இராதாகிருஷ்ணமாயியின் மீது மரியாதை செலுத்தினர். அவளது பக்தியை மதித்தனர். ஆனால் சீரடி மக்களில் சிலரோ அன்னையைக் கண்டு பொறாமைப்பட்டனர்.

இராதாகிருஷ்ணமாயியைப் பொருத்த வரை சீரடியே பிருந்தாவனம். துவாரகாமாயியே, வைகுண்டம். சாயிநாதரே ஸ்ரீ விட்டலன் என்ற பாவத்தில் திளைத்திருப்பவள். அவளது தூய பக்தியை பாபாவைத் தவிர வேறு ஒருவரும் உணரவில்லை.

சிறிய குக்கிராமமான சீரடியில் வசிக்கும் பாபாவை மக்கள் உண்மையில் நேசித்தாலும், இராதாகிருஷ்ணமாயியின் பிரேம பக்தியை அறியாமல் மக்கள் மனதில் முர்பாடான எண்ணங்களே உருவாகி இருந்தன. 1907 ஆம் ஆண்டு நடந்த நிகழ்ச்சிகள் இதுவே.

அதுவரை சீரடி கிராமமும் எந்த முன்னேற்றமும் அடையாமல் இருந்தது. மக்கள் கூட்டம் ஊட்டமாக வருவதும் போவதுமாக இருப்பர். அவர்களின் முன்னால் இராதா கிருஷ்ணமாயி பாபாவை,



குருமகராஜ், சாயிமகராஜ், என்றெல்லாம் பிரேமையால் அழைப்பாள். பிச்சை எடுத்து உண்ணும் சாயிபாபாவிற்கு, இத்தகைய மரியாதையா என்று சாயியை அறியாத மக்கள் அன்னையை கண்டு ஏளனம் செய்தனர்.

தீட்சித், தபோல்கர்,கபர்டே, நூல்கர், மேகா போன்ற அடியவர்கள் சீரடிக்கு வராத காலம் அது. பிருந்தாவனமான சாலாவை இராதாகிருஷ்ணமாயி எப்போதும் அலங்காரம் செய்தபடி இருப்பாள். தண்ணீர் பயன்பாட்டிற்காக கிராமத்தின் கிணற்றில் உள்ள உப்பு நீரையே எடுத்து வருவாள். ஆயினும் தண்ணீரை பிருந்தாவனத்திற்கு கொண்டு வந்து பயன்படுத்தும் போது இனிமை நிறைந்ததாகவே இருக்கும்.

இது சாயி கிருஷ்ணனின் லீலையே என்பதை அன்னை உணர்ந்தே இருந்தாள்.

நித்தமும் பூஜை அறையில் இருக்கும் கிருஷ்ண விக்கிரகத்தை மார்போடு அனைத்து உணர்வூட்டி கொஞ்சுவாள்.



ஸ்ரீ சாயிநாதருடைய ரூபத்தையும், ஸ்ரீ விட்டலனது ரூபத்தையும், பூக்களாலும், விளக்குகளாலும், அலங்கரித்த வண்ணம் காப்படுவாள்.

ஆயியின் இந்த பிரேமையை நானா, தாம் நேரில் கண்டு ரசித்ததாக கூறியுள்ளார். சாயிநாதர் அன்றாடம் தான் உண்ணும் உணவின் மிச்சத்தை அதற்காகவே காத்திருக்கும் இராதாகிருஷ்ணமாயியிடம் தரும்படி ஆள் விட்டு அனுப்புவார் பாபா. சாயிநாதர் அன்னையை மாயி என்றும், ஆயி என்றும் அழைப்பார். ஆகவே அன்னையின் காவியத்தில் அன்னையை இனி ஆயி என்றே அழைப்போம்.

அப்துல்பாபா என்ற அடியவரை பாபா 1890 இல் சீரடிக்கு இழுத்துக் கொண்டார். பாபாவின் மசூதி, சாவடி, லெண்டித்தோட்டம், நந்தா தீபம் முதலியவைகளை பராமரித்துக் கொண்டு, பாபாவிற்கு பல சேவைகளை செய்து கொண்டு இருந்தார். பாபாவின் அருகில் அமர்ந்து குரான் படிக்கும் சேவையும் அவருடையதே ஆகும்.

பாலாஜீ நெவாஸ்கர் பாடீல் என்பவர் நெவாஸே என்னும் ஊரில் இருந்து அடிக்கடி பாபா விடம் வந்து தன்னால் முடிந்த சேவைகளை செய்வார். பாபா நடக்கும் பாதைகளைக் கூட்டி சுத்தப்படுத்துவார். அதனால் பாபா அவரை "தோட்டி" என்றே அழைப்பார். அப்துல் பாபாவை என் "காக்கை" என்று அழைப்பார்.

இவர்களோடு லட்சுமி பாயும் சிறந்த சேவைகளை பாபாவிற்குச் செய்வாள். அப்துல்லாவையும், பாலாஜீயையும் பாபா அழைத்து, நீங்கள் இருவரும் சாலாவில் இருக்கும் ஆயியை பார்த்து பேசிவிட்டு வாருங்கள். அப்துல்லா, முக்கியமாக இனி உனக்கு தாய் இராதாகிருஷ்ணமாயியே, அவளே இனி உன்னை பேணி காப்பாள். அவளுடனே நீ தங்கியிரு. அவள் கூறுவதைக் கேட்டு நடந்து கொள் என்றார். பாபா.

அப்துல்லாவும், பாலாஜியும் சாலா என்ற இராதாகிருஷ்ணமாயியின் குடிசையை நோக்கிச் சென்றார்கள். அவர்களை அன்புடன் வரவேற்ற அன்னை, வா, மகனே அப்துல்லா, உங்கள் இருவரையும் பார்த்துக் கொள்வது எனது கடமை என்றாள்,

இருவரும் மெய் சிலிர்த்துப் போயினர். இருவரிடமும் பாபா என்ன சொல்லி அனுப்பினாரோ, அதையே அன்னையும் கூறுகின்றாரே என வியந்தனர்.

இந்த எண்ணம் அப்துல்லாவின் மனதில் ஓடும் போதே, கவலைப்படாதே அப்துல்லா, இனி நீ இந்த பிருந்தாவனத் திலேயே தங்கி இருக்கலாம் என் ஆயி கூறும்போது அப்துல்லாவின் மனம் பஞ்சுபோல் ஆவதை உணர்ந்தான்.

- (தொடரும்...)

ஓம் சாய்ராம்

வாழ்வை வளமாக்கும் இனிய சாயி லிகித ஜயம்

சாய் அன்பர்களுக்கு பணிவான வணக்கத்துடன்...

ப்ரபஞ்சத்தின் ஆற்றல்மிக்க சக்தி ஸ்வரூபனான நம் அன்பு சாய் மஹராஜ் க்ருபையினால் நமக்கு அளிக்கப்பட்ட திரு மந்த்ரமான,

"ஓம் ஸ்ரீ சாய் ராம ஜயம்" என்ற

சக்தி வாய்ந்த லிகித நாம ஜபம் தினமும் 108 முறை யாவது மனம் ஒன்றி எழுதி நமது கர்ம வினைகளின் தாக்கத்தில் இருந்து, தற்காப்பு செய்து கொள்வதுடன், நமது அனைத்து காரியங்களிலும், பேரொளியாய் சாய்நாதர் வழி காட்டி, பரிபூரணமாய் நம்மை ஆசீர்வதிக்க ப்ரார்த்திப்போம் வாரீர்.



'லிகித நாம ஜபம் மனித குலத்திற்கு மாமருந்து'

தொடர்புக்கு;

சுந்தர்சாய், செல்: 9789404451

சித்தர்களின் ஜீவ சமாதி தரிசனம்



- அயனாவரம்
வெங்கடேசன்
9941782523


இம்மாத சிசித்தர்களின் சீவ சமாதி தரிசனத்தில் இம்மாதம் நாம் ஸ்ரீ சிவானந்த சரஸ்வதி சுவாமிகளின் சரிதத்தை அறிந்து கொண்டு, சுவாமிகளின் ஜீவ பீடத்தை தரிசிப்போம்.

ஸ்ரீ சிவானந்த சரஸ்வதி சுவாமி

இராணிப்பேட்டை மாவட்டம், கலவை வட்டம் பனையூர் என்ற சிற்றூரில் திரு. முனுசாமி கன்னியம்மாள் என்ற தம்பதியினருக்கு 30.8.1939 அன்று நம் சுவாமிகள் மகனாய் அவதரித்தார்.

சுவாமிகள் துணி வெளுக்கும் குலத்தில் பிறந்தார். மனிதர்களின் மனம் வெளுக்கும் சேவை செய்வதற்காக இறைவனால் நியமிக்கப்பட்டவர். காலமாற்றத்தி னால் இவர்களது குடும்பம் நாடக குழுவை அமைத்து பல ஊர்களுக்குச் சென்று ஆன்மீக நாடகங்களை நடத்தி வாழ்க்கையை ஓட்டிவந்தார்கள்.

நாடகத்தில் நமது சுவாமிகளுக்கு எப்போதும் முருகன் வேடம் தான் கொடுப்பார்கள். சுவாமியும் முருகன் வேடம் அணிந்து முருகப் பெருமானாகவே தன்னை நினைத்துக் கொண்டு ஆடிப் பாடி ஆனந்தமாக நடித்து வந்தார்.





சுவாமிகள் வாலிப பருவம் அடைந்ததும் பெற்றோர்கள் அவருக்கு திருமணம் செய்து வைக்க எண்ணி அவரது சம்மதத்தை கேட்க அவரோ தனது ஆன்மீக ஈடுபாட்டை காரணம் காட்டி திருமணத்திற்கு உடன்பட வில்லை.

ஆனாலும் பெற்றோரின் அன்புத் தொல்லையால், வேலூர் செம்பாக்கத்தை சேர்ந்த வசந்தா என்ற மங்கையை திருமணம் செய்து கொண்டார். பின்பு இவர்களுக்கு 3 மகன்களும் 3 மகள்களும் பிறந்தனர். ஆனாலும் சுவாமிகளின் ஆன்மீக ஈடுபாட்டில் எந்த மாற்றமும் இல்லை.

காலம் செல்லச்செல்ல நமது சுவாமி களின் ஆன்மீக் ஈடுபாடு அதிகரித்தது. எனவே திருவலம் சுவாமிகளிடம் உபதேசம் வாங்கி இல்லறத்தை துறந்து ஆன்மீக பணியாற்ற தனியாக பல ஊர்களைச் சுற்றி இறுதியாக தன் சொந்த ஊரான பனையூருக்கு அருகே உள்ள மாம்பாக்கம் கிராமத்தில் ஒரு சிறு குடில் அமைத்து ஆன்மீகப் பணியாற்றினார்.

ஒர் நாள் சுவாமிகள் தவத்தில் இருக் கும்போது முருகப்பெருமான் ஒளிவடிவில் காட்சியளித்து இவரை ஆட்கொண்டார். அதன் பிறகு மாம்பாக்கத்தில் இருந்து பனையூர் சென்று அங்கு பாழைடைந்து கிடந்த சிவன் கோவிலை சுத்தம் செய்து அங்கேயே சிலகாலம் தங்கினார்.

அங்கு தங்கியிருந்த காலத்தில் கோவிலைச் சுற்றியுள்ள இடங்களில் காய்கறிகளை பயிரிட்டு அறுவடை செய்து அவற்றை விற்று அதில் வரும் வருவாயைக் கொண்டு அரிசி வாங்கி கஞ்சி காய்ச்சி ஊர்மக்களுக்கு அன்னதானம் செய்து பசியை போக்கினார்.

இல்லறத்தை முழுமையாக ஒதுக்கி விட்டு, கடுமையான தனது ஆன்மீகப் பயணத்தில் பயணித்து தனது லட்சியத்தை அடைந்தார் சுவாமிகள். அவர் வாழும் போது அவரது குடும்பத்தினர் யார் வந்தாலும் தன் பக்கத்தில் சேர்த்துக் கொள்ளவில்லை. அவர்களை, அடித்து திட்டி துரத்திவிடுவார். அவர்களும் அமைதியாகச் சென்று விடுவார்கள்.

1983 ஆம் ஆண்டு இவரது மூத்த மகனுக்கு திருமணம் செய்து வைக்க இவரை அழைத்த போது வர மறுத்து



விட்டார். பிறகு உறவினர்கள், நீங்கள் தந்தையாக வரவேண்டாம், சுவாமியாக வந்து மணமக்களை ஆசீர்வதியுங்கள் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க தனது மூத்த மகன் நீலகண்டன் அவர்களது திருமணத்தில் கலந்து கொண்டு ஆசி வழங்கினார்.

சுவாமிகளின் மனைவி வசந்தா அவர்கள் மறைந்த போதும் சுவாமிகள் வீட்டிற்குச் செல்லவில்லை. கடைசிவரை தான் ஏற்படுத்திய குடிசையிலேயே தன் ஆன்மீகப் பணிகளை மேற்கொண்டார்.

சுவாமிகள் தன்னை நாடிவரும் பக்தர் களுக்கு, விபூதி, எழும்பிச்சை கனிகளை வழங்கி அவர்களின் பிரச்சனையை தீர்த்துவைத்தார். ஊர் மக்கள் இவரின் மகத்துவத்தைப் புரிந்து கொண்டு சுவாமிகள் மடம் அமைப்பதற்கு நிலத்தை தானமாகக் கொடுத்தார்கள். அந்திலத்தில்தான் சுவாமிகளின் சீவ சமாதி அமைந்துள்ளது.

சுவாமிகளிடம் செல்லும் பக்தர்களை முதலில் சாப்பிடக் கூறி, சாப்பிட்ட பின்புதான் அவர்களின் குறைகளைக் கேட்டு அறிந்து கொள்வார். சாப்பிடாதவர் களின் குறைகளை கேட்டமாட்டார்.

சுவமிகளுக்கு சீடர்கள் பலர் இருந்தனர். அதில் ஏழுமலை, பிச்சாண்டி இருவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். சுவாமிகள் உறவுகளை அருகில் சேர்க்காதபோதும் காலப் போக்கில் அவரது மூத்த மகன் நீலகண்டன் சுவாமிகளுக்கு சீடரானார்.

திரு. நீலகண்டன் அவர்களும் தனது தந்தையை தனது குருவாக ஏற்றுக்கொண்டு பணிவிடைகளை செவ்வனே செய்து வந்தார். சுவாமிகளின் இறுதிக் காலத்தில் அருகில் இருந்து கவனித்துக் கொண்ட நீலகண்டன் சுவாமிகள் சமாதி ஆனதும், ஸ்ரீ சிவானந்த சரஸ்வதி சீவ பீடம் அமைத்து நிர்வகித்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது தனது தந்தையைப் போன்ற ஆன்மீகத்தில் உயர்ந்த நிலையை அடைந்து தனது பக்தர்களால் ஸ்ரீ நீலகண்ட சுவாமிகள் என்று அழைக்கப்படுகின்றார்.

சுவாமிகள் தனது அந்திமக்காலத்தில் சீரணக்கோளாறால் அவதிப்பட்டார். வெளியூரில் இருந்த நீலகண்டசுவாமிகள் உடனே வந்து ஒச்சேரி பிரம்ம ஸ்ரீ உமாபதி சுவாமிகளின் அறிவுறுத்தலின்படி சுவாமிகளின் விரும்பம் இல்லாமல் மருத்துவமனையில் சேர்க்க அங்கு சுவாமிகளுக்கு உடனடியாக அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று கூறி, சுவாமிகளின் தாடி மீசையை எடுத்துவிடும் படிகூற, அதற்கு சுவாமிகள் உடன்படவில்லை.

தனது சீடர் நீலகண்டனிடம், என்னை படைத்து காத்து வரும் சிவனுக்கு என்னை எப்போது அழைத்துக் கொள்வது என்பது தெரியும். எனவே என்னை மடத்திற்கே அழைத்துச் செல்லவும் என்று கூற, நீலகண்ட சுவாமிகளும். சுவாமிகளுக்கு

அறுவை சிகிச்சை செய்யாமலே மடத்திற்கு அழைத்து வந்து விட்டார்.

சுவாமிகள் மடத்திற்கு வந்து சில மாதங்களில் 7.9.2017 வியாழக்கிழமை இரவு 8.10 க்கு சமாதி நிலையை அடைந்தார். அவர்க ளுடைய சீடர்கள், பக்தர்கள், ஊர்மக்கள் முன்னிலையில், சங்க நாதம் முழங்க, சிவனடியார்கள் மந்தி ரம் உச்சரிக்க மடத்திலேயே சமாதி செய்விக்கப்பட்டது.

அருள்நிறைந்த சித்த புருஷரின் வரலாற்றை அறிந்து அவரை வணங்கி கர்மவினையின் வீரியத்தை குறைத்துக் கொள்வோம்.

சித்தர்களை வணங்கி அவன்தாள் பணிவோம்!சீரான வாழ்க்கையை சிக்கலின்றி பெறுவோம்!



சீவபீட முகவரி:

ஸ்ரீ சிவானந்த சரஸ்வதி சுவாமிகள் மடாலயம், மாம்பாக்கம் கிராமம்,

கலவை வட்டம், இராணிப்பேட்டை (மா)

பேரூந்து வழித்தடம்:

காஞ்சிபுரத்தில் இருந்து ஆரணி செல்லும் பேரூந்தில் மாம்பாக்கம் இ.பி ஆபீஸ் நிறுத்தத்தில் இறங்கவும்.

- (தொடரும்)

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன் M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

அன்னை சாரதா தேவி!

அன்னை சாரதா தேவி, மேற்கு வங்காளத்தில் ஜெயராம் பாடி என்ற கிராமத்தில் 1853 டிசம்பர் 22ஆம் தேதி பிறந்தார். பெற்றோர் ராமச்சந்திர முகர்ஜி சியாமா சுந்தரி ஆவர்.

அன்னை சாரதா சிறுமியாக இருந்த போது தம்பி தங்கைகளை பராமரிப்பது, சமைப்பது, பூணூல் செய்வது, வீட்டில் உள்ள மாட்டுக்குப் புல் வெட்டுவது போன்ற காரியங் களைச் செய்வார்.

பொம்மைகள் செய்து விளையா டுவார். காளி, லட்சுமி தேவியரை மலர்களால் அலங்கரித்து தியானிப்பார். ஒருமுறை ஜெயராம் பாடியில் கடும் பஞ்சம் நிலவிய போது அன்னையின் தந்தை ராமச்சந்திரர் ஏழைகளுக்கு உணவளித்தார். சாரதாவும் தன்னாலான உதவிகளை அப்போது செய்தார்.

ஸ்ரீ இராமகிருஷ்ணர் அவரை மணந்து கொண்டதே சுவையான நிகழ்ச்சி. அவர் அப்போது தட்சிணேஸ் வர கோயிலில் பூசாரியாக இருந்தார். வீட்டில் அவருக்குத் திருமணம் செய்ய பெண் தேடினார்கள்.

எங்கும் பெண் கிடைக்கவில்லை. இந்தக் காலத்தில் பெண் வீட்டார் மாப்பிள்ளைக்கு வரதட்சிணை தர வேண்டி இருப்பது போல் அந்தக் காலத்தில் மாப்பிள்ளை வீட்டார் பெண்ணுக்கு வரதட்சிணை தர வேண்டிய பழக்கம் குறிப்பாக



வங்காளத்து அந்தணர்களிடையே இருந்தது.

இராமகிருஷ்ணரின் குடும்பத்தினரால் அதிக பணம் கொடுக்க முடியாத நிலை. அத னால் பெண் தேடுவதில் சிரமம் ஏற்பட்டது. குடும்பத்தினர் நம்பிக்கை இழக்கலாயினர்.

ஒரு நாள் மனச்சோர்வுடன் அமர்ந்திருந்த தாயையும், தனது அண்ணனையும் நோக்கி இரா மகிருஷ்ணர் சொன்னார், எனக்கு பெண் தேடி எங்கும் அலைய வேண்டாம். ஜெயராம் பாடி செல்லுங்கள். எனக்

கென்று தேர்ந்தெடுக்கப்பட்ட மணமகள் அங்கே இராமச்சந்திர முகர்ஜி வீட்டில் இருக்கிறாள்' என்று கூறினார்.

அவர்களும் அவ்வாறே ஜெயராம் பாடி சென்று சாரதாவின் தந்தை இராமச்சந்திர முகர்ஜியிடம் பெண் கேட்டனர். திருமணம் நடந்தபோது இராமகிருஷ்ணரின் வயது இருபத்து மூன்று, சாரதாவுக்கு வயது ஐந்து.

இராமகிருஷ்ணரும் சாரதாவும் வெளியுலகிற்குத் தான் கணவன் மனைவி. உண்மையில் குரு - சிஷ்யை, தந்தை மகள், தாய் மகன் போன்றே வாழ்ந்தனர்.

இராமகிருஷ்ணர் சாரதாவிற்கு வீட்டு வேலைகளையும் ஆன்மிக சாதனையாய் செய்யும் முறையைக் கற்றுத் தந்தார். ஒருமுறை சாரதா தன் தாய் வீட்டான ஜெயராம் பாடிக்குச் சென்றிருந்தபோது இராமகிருஷ்ணர் கடுந்தவத்தில் ஈடுபட்டிருந்தார். அவர் தவத்தில் ஈடுபட்டிருப்பதை அறியாதவர்கள் அவரைப் பித்தர் என்று ஏசினர்.

இதனால் ஜெயராம் பாடியில் இருந்த சாரதை மனம் கலங்கி அவரைக் காண தட்சிணேசுவரம் புறப்பட்டார். நீண்ட பயணத்தால் வழியில் அவர் களைப்புற்றார். காய்ச்சலும் வந்தது.

அப்போது, பயணத்தின் இடையில் எங்கிருந்து தோன்றிய ஒரு பெண்மணி சாரதாவின் வந்து, 'சாரதா, நீ சீக்கிரம் குணமடைவாய். உனக்காகவே உன் கணவனை நான் தட்சிணேசுவரத்தில் வைத்துள்ளேன்' என்றாள்.

அவ்வாறு சொல்லிச் சென்றது தட்சிணேஸ்வரத்து பவதாரிணி தேவியே என்பதை அன்னை சாரதா உணர்ந்து கொண்டார். தட்சிணேஸ் வரம் அடைந்த சாரதாவை இராம கிருஷ்ணர் அன்போடு வரவேற்றார்.

ஊரார் அவரைப் பற்றி உரைத்தது உண்மையல்ல என்பதை சாரதா உணர்ந்தார். ஆனால் தம்முடைய கணவர் சராசரி மனிதரல்ல, அவர் ஒருபோதும் சம்சார வாழ்க்கைக்குத் திரும்ப மாட்டார் என்பதும் அவருக்குப் தெளிவாகப் புரிந்தது. எனவே கணவருடைய தெய்வீக வாழ்க்கைக்கு உதவியாய் இருப்பதே தமது கடமை என்று அவர் தீர்மானித்துக் கொண்டார்.

நஹபத்தில் சாரதை தமது தவ வாழ்க்கையை துவக்கினார். இராம கிருஷ்ணருக்கும் அவரது குடும் பத்தினருக்கும் மற்றும் பக்தர்களுக்கும் அயராது பணிவிடை செய்தார். தம்பதிகள் இருவரும் ஆன்மீக நிலை யில் திளைத்தனர்.

ஒருமுறை கணவரின் பாதத்தைப் பிடித்து விட்டுக் கொண்டிருந்த போது சாரதை கேட்டார், 'நீங்கள்





என்னை எப்படிப் பார்க்கிறீர்கள்?' என்று. இராமகிருஷ்ணர் 'பராசக்தியின் வடிவமாகத்தான் உன்னைப் பார்க்கிறேன். நஹபத் கோயிலில் சிலையாகவும், என்னை ஈன்றவளாகவும், அன்னை பராசக்தி இருக்கிறாள். இப்போது அவளே என் கால்களைப் பிடித்துவிட்டுக் கொண்டிருக்கிறாள்' என்று கூறினார். இராமகிருஷ்ணரிடம் கற்ற ஆன்மீகப் பாடங்களை சாரதா கடைப்பிடிக்கப் தொடங்கினார்.

அன்னை சாரதா தேவி எப்போதும் நஹபத்தின் படிகளில் அமர்ந்து ஜபமும், பிரார்த்தனையும் செய்வார். ஒருமுறை ஓடக்காரனின் பாடல்களைக் கேட்ட போது அவருக்குச் சமாதி நிலை கூடியது.

இராமகிருஷ்ணர் அன்னை சாரதா தேவிக்கு தனது தியான முறைகளை கற்று கொடுத்தார். "நிலவில் களங்கம் இருக்கலாம். ஆனால் என் மனத்தில் சிறிதளவுகூட களங்கம் இருக்கக் கூடாது" என்று இறைவனிடம் அவர் பிரார்த்திப்பார். ஒருநாள் பவதாரிணி காளி பூஜை அன்று இராம கிருஷ்ணர் சாரதாவை ஷோடசி தேவியாக பாவித்து பூஜை செய்தார்.

ஸ்ரீ இராமகிருஷ்ணர் தமது ஆன்மிக சாதனைகளின் பலன்களை எல்லாம் அன்னை சாரதாவிடம் சமர்ப்பித்தார். தேவியாக வழிபடப்பட்டாலும் அன்னை சாரதா குடும்ப காரியங்கள் அனைத்தையும் சரிவர செய்து வந்தார்.

தெய்விக சக்தியோடு சீடர்களுக்கும், பக்தர்களுக்கும், அன்புத் தாயாய் விளங்கினார். இராமகிருஷ்ணர் தமக்குப் பின்னர் அன்னை சாரதா தேவி ஆன்மிகத்தில் அனைவருக்கும் வழிகாட்ட வேண்டும் என்று எண்ணினார். அதற்காகப் பல்வேறு மந்திரங்களையும், தியான முறைகளையும் கற்பித்தார்.

ஸ்ரீ இராமகிருஷ்ணர், 1886 ஆகஸ்ட் 16 அன்று சமாதி நிலையில்

மூழ்கினார். திரும்பவில்லை. தம் முடைய அவதாரப் பணியை நிறைவேற்றியவராய் அவர் மறைந்தார்.

கணவர் ராமகிருஷ்ணர் மறைந்த சோகத்தை மறக்க அன்னை சாரதா தேவி காசி, பிருந்தாவனம் போன்ற தலங்களுக்குச் சென்று தவமியற்றினார். இடைவிடாது பிரார்த்தனை செய்தார்.

ஸ்ரீ இராமகிருஷ்ணரின் மறை விற்குப் பிறகு அவருடைய உறவினர் களின் புறக்கணிப்பு, வறுமை போன்ற சூழ்நிலையிலும் அன்னை சிறிதும் கலங்கவில்லை. "இறைவனை மட் டும் எப்போதும் சார்ந்திரு" என்ற குருதேவரின் உபதேசத்தை அவர் கட்டளையாய் ஏற்றார்.

ஸ்ரீ இராமகிருஷ்ணரின் மறை விற்குப் பிறகு அன்னையும், சீடர்களும் சுவாமி விவேகானந்தர் தொடங்கிய பேலூர் மடத்தில் தங்கினர். மேலை நாட்டிலிருந்து வந்த விவேகானந்தரின் சீடர்களுக்கு அன்னை மந்திர தீட்சை தந்து உபதேசம் வழங்கினார்.

இடைவிடாது ஜபம், தியானம் மற்றும் சேவை செய்து வந்தார். அது இந்திய சுதந்திரப் போராட்ட காலம். பிரிட்டிஷ் போலீசார் பெண்களுக்கு இழைத்த கொடுமைகளை அன்னை எதிர்த்தார்.

இயல்பிலேயே எளியோருக்கு இரங்கும் குணமுடையவர் அவர். வறுமை காரணமாய் திருடி சிறைக்குச் சென்று திரும்பியவனுக்கு கூட உணவளித்து ஆசி கூறுவார். அவருடைய அன்பு சாதி மதம் கடந்தது.

எல்லாரையும் தமது பிள்ளை களாகவே கருதி, யாரையும் பாரபட்ச மின்றி நடத்துவார்.அன்னை ஸ்ரீ சாரதா தேவி 1911ல் தமிழகம் வந்து, சென்னை கபாலீஸ்வரர் கோயில், பார்த்தசாரதி கோயில் போன்ற இடங்களுக்குச் சென்று இறைவனைத் தரிசித்தார். இராமேஸ்வரம் போன்ற புண்ணிய தலங்களுக்கும் சென்று இறைவனை தரிசித்தார்.

மடத்துப்பணிகளை குருதேவருக் கான கைங்கர்யமாய் கருத வேண்டும் என்று அன்னை அனைவருக்கும் போதித்தார். அவர் சமுதாய உணர் வோடு தமது கிராமத்தில் ஓர் ஆரம்பப்பள்ளியும், அணைக்கட்டும் கட்ட ஏற்பாடு செய்தார். மடத்தின் முக்கியமான விஷயங்கள் அனைத்தி லும் அன்னையின் சொல்லே முடிவாயிருந்தது.

அவர் பலகாலம் பரவச நிலையில் இருந்தார். வந்தவர் களுக்கெல்லாம் தொடர்ந்து தீட்சை அளித்தார். தினமும் அவரே பக்தர்களுக்காக சமைத்துப் பரிமாறுவார். இடை விடாத உழைப்பில் அவரது உடல்நலம் பாதிக்கப்பட்டது.

1920, ஜூலை 20ஆம் தேதி அன்னை ஸ்ரீ சாரதா தேவி தமது பூத உடலை உகுத்தார். ஆனாலும்



அவருடைய சாந்நித்யம் என்றும் இங்கே நிலைத்திருப்பதை உணரலாம்.

சராசரிப் பெண்களின் சுகதுக்கங் களை உதறிவிட்டு, தமது கணவரின் வாழ்க்கை முறைக்குத் தம்மைத் தயார் செய்து கொண்டவர். சாதாரண கிராமத்துப் பெண்ணான அன்னை தம்முடைய இறுதி நாளில்

உலகுக்களித்த செய்தி இதுதான்:

"எனக்கு ஓய்வு என்பதே கிடையாது. என் பிள்ளைகள் அனைவருக்காகவும் நான் உழைத்துக் கொண்டே இருப்பேன். என் உடல் மறைந்த பின்னும் அவர்களின் நலனை நான் கவனித்தேயாக வேண்டும்".

ஆதிபராசக்தி அம்பிகையின் திரு அவதாரம் அன்னை ஸ்ரீ சாரதா தேவியார். இந்த உலகம் பல அவதாரங் களைக் கண்டு இருக்கிறது. அந்த அவதாரங்கள் பலருக்கும் அருள் புரிந் திருக்கிறார்கள். இது பலரும் அறிந்த விஷயம்.

ஆனால் சாரதா தேவி என்ற அம்பிகை ஆரம்பத்தில் பலரும் அறியும் வகையில் அவதாரமாகத் தோன்றவில்லை! "அம்மாவாகவே" தோன்றினாள்! அம்மாவாக உரு வெடுப்பவர்கள் ஒவ்வொருவரும் தன்னை மறைத்துக் கொண்டு தன் தலைவனையும், தனது குழந்தைகளின் பெருமைகளையும் மட்டுமே முன் நிறுத்துவார்கள்.

அவதாரமாக வந்து ஆசீர்வதிப்பது வேறு! அம்மாவாக இருந்து ஆகர்ஷிப் பது வேறு! அன்னை சாராவும், அதிசய அன்னையாக அனைவரையும் ஆகர்ஷித்தாள். பெண் ஒருத்தி மோசமான வாழ்க்கை வாழ்ந்து வந்தாள். அவள் தன் பாவச் செயலுக்கு மிகவும்



மனம் வருந்தி, உள்ளம் உருகினாள். அவள் பாவங்களை கரைக்கும் பொருட்டு, அன்னை ஸ்ரீ சாரதா தேவியரிடம் சென்றாள்.

தான் வாழ்க்கையில் செய்த பாவங்களையெல்லாம் ஒன்று விடாமல் அன்னையிடம் கூறி,

"என்னை மன்னித்து, இனி அத்தகைய வாழ்க்கையில் நான் ஈடுபடாமல் வாழும்படி என்னை ஆசீர் வதியுங்கள் " என்று கூறி அழுதாள்.

அந்தப் பண்ணை மிகுந்த பாசத்தோடு ஆரத் தழுவிக் அன்னை, "மகளே நீ கடந்த காலத்தை நினைத்து கண்ணீர் விடாதே ! பாவம் செய்யத் தூண்டும் உன் மனோநிலையை நீ வெற்றிக்கொள்வாய். நல்ல வாழ்க்கை வாழ்வாய் " என்று கூறி ஆசீர்வதித்தார். அதோடு அன்னை, அந்தப் பெண்ணுக்கு மந்திர தீட்சையும் கொடுத்தார். தெய்வத்திருநாமத்தை இடைவிடாது ஓதி அந்தப் பெண்ணும்

பாவம் கரையப்பெற்றாறீள்.

ஒருமுறை சீடர் ஒருவர், அன்னை யிடம் மற்றொரு சீடரைப் பற்றிக் கூறி " அந்தத் சீடரின் தவறான நடத்தையின் காரணமாக, நீங்கள் அவரை உங்கள் முன்னால் வருவதற்கு அனுமதிக்கவே கூடாது "என்று கூறினார்.

இதைக் கேட்ட அன்னை பதற்றத் தோடு "நீ என்ன சொல்கிறாய்? என் குழந்தையைச் சேற்றையோ அழுக்கையோ பூசிக்கொண்டால், அதைத் துடைத்துக் கழுவி மடி மீது வைத்துக் கொள்வதுதானே தாயாகிய என் கடமை? அதை விட்டு, "அவன் என் முன் வருவதற்கு அனுமதிக்காதே, என்று சொல்கிறாயே " என்றார்.

அன்னையின் அன்பு மொழிகள்.

வாழ்க்கை பிரச்சினைகளைத் தீர்க்க சுலபமானதும் மேலானதுமான வழி ஆண்டவனின் நாமத்தை மௌன மாக ஜெபிப்பது.

சோம்பலினால் உடல் மட்டுமல்ல மனமும் கேட்டு விடு கிறது. சோம்பியிருக்கும்போது எல்லாவித மான தீய எண்ணங்களும் மனதில் தோன்றும்.

நீ யாரிடமும் எதையும் எதிர்பார்க் காமல் இருந்தால் உன்னால் அனைவ ரையும் சமமாக நேசிக்க முடியும்.

உனக்கு அமைதி வேண்டுமானால் பிறர் குற்றங்களைப் பார்க்காதே. அதற்குப் பதிலாக உன் குறைகளைப் பார்! உலகம் முழுவதையுமே உனது சொந்தமாக கற்றுக்கொள் !

அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் தியாக வாழ்க்கையை படித்தால் மட்டும் போதாது. நம் வாழ்க்கையிலும் அதை கடை பிடிக்க வேண்டும். அதுவே நாம் அவர்களுக்கும் செய்யும் உண்மையான சேவையும், பக்தியுமாகும்.

விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

அன்பான சாயி சொந்தங்களே...உங்களது நிறுவனங்கள், கடைகள், தொடர்பான விளம்பரங்களை பிரசுரித்து பயனடையலாம்.



முழுபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.2000

அரைபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.1000

முன் பின் அட்டை உள்பக்கம் கலர் ரூ.3000

பின் அட்டை கலர் ரூ.4000

சாயி பக்தி லோபம் -3




எனது பெயர் லதா பாஸ்கரன் சென்னை அண்ணா நகரில் வசிக்கின்றேன். கலியுகத்தின் கண்கண்ட தெய்வம் ஸ்ரீ சீரடி சாயி பாபா என் வாழ்க்கையில் பல அற்புதங்களை நிகழ்த்தியிருக்கின்றார் அதில் ஒன்றை மட்டும் பாபாவின் அனுமதியுடன் பக்தர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

1984 ஆம் வருடம் எனக்கும் எனது கணவர் பாஸ்கரனுக்கும் திருமணம் நடந்தது.1999 ஆம் வருடம் வரை 14 ஆண்டுகள் எங்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கவில்லை. குழந்தை பாக்கியத்திற்காக நாங்கள் போகாத கோவில் இல்லை. வணங்காத தெய்வமும் இல்லை. பார்க்காத சோதிடமும் இல்லை. குழந்தைச் செல்வத்திற்கு உங்கள் சாதகத்தில் இடமில்லை என்று சோதிடர்கள் கூறிவிட்டார்கள்.

இறுதியாக குழந்தையின்மை குறைபாட்டை நீக்குவதற்காக மருத்துவரிடம் சிகிச்சைக்காக சென்றோம். அங்கேயும் சந்தேகத்திற்கு இடமான பதிலே கிட்டியது. இருப்பினும் மனம் தளராமல் முயற்சித்தோம்.

அதே காலகட்டத்தில் 1998 ஆம் வருடம் எனது கணவர் அவரது நண்பரை நம்பி அவரது தேவைக்காக ரூ. 5 லட்சம் பணம் கொடுக்க, அவர் அதை திருப்பி தராமல் சாக்கு போக்கு சொல்லி காலத்தை கடத்திக் கொண்டு இருந்தார்.

ஒரு வருடம் சென்றது. பணம் வாங்கிய நபர் என் கணவர் பணமே கொடுக்க வில்லை என்று கூறி கொடுக்



காத பணத்தை எப்படி திருப்பிதர முடியும் என்று சமயோசிதமாக கூறி என் கணவருக்கு நம்பிக்கை துரோகம் செய்து விட்டார்.

என் கணவருக்கோ மிகுந்த மன உளைச்சல். என்ன செய்வது என்றே தெரியாத நிலை. ஒருபக்கம் குழந்தைச் செல்வம் கிட்டவில்லையே என்ற ஏக்கம் மறுபுறம் நம்பிக்கை துரோகம். என் கணவர் வருத்தப்படுவதை சகிக்காத நான் மயிலாப்பூர் சாயிபாபா கோவிலுக்குச் சென்று ஏழு வாரங்கள், உனது கோவிலை 21 முறை வலம் வருகின்றேன். என் கணவர் ஏமாந்த தொகை எங்களுக்கு கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொண்டேன்.

நன்றாக கவனியுங்கள். நான் குழந்தை வரம் கேட்டு பாபாவிடம் பிரார்த்திக்கவில்லை. நாங்கள் இழந்த பணம் திரும்பி வர வேண்டும் என்று மட்டுமே பிரார்த்தனை செய்து கொண்டேன். பிரார்த்தனை செய்து கொண்டது போன்று ஏழு வாரங்கள் சென்று கோவிலை 21முறை வலம் வந்தேன்.

ஏழு வாரங்கள் நிறைவடைந்தது. சாயிநாதனின் லீலையை என்னவென்று விவரிப்பது. நான் உனக்கு விலை மதிக்க முடியாத பட்டுத்துணியை வழங்கலாம் என்று நினைக்கிறேன். நீயோ சாதாரண கந்தல் துணிக்காக ஏங்குகின்றாயே! என்ற சாயிநாதரின் வாக்கினுக்கேற்ப சோதிடர்களும், மருத்துவர்களும், வியக்கும் வண்ணம் நான் கருத்தரித்தேன்.

ஆம் நான் பணம் என்ற கந்தல் துணியை கேட்டு பாபாவிடம் பிரார்த்திக்க, கருணை வள்ளலாகிய பாபா எனது அறியாமையை பொருத்துக் கொண்டு எனக்கு பட்டுத்துணியாகிய குழந்தைச் செல்வத்தை அருளி ஆசிபுரிந்தார்.சாயிபாபாவின் அருளால், கரு ணையினால், இரக்கத்தினால், அன் பினால் 2000 வது ஆண்டு எனக்கு ஒரு மகன் பிறந்தான். நாங்கள் கேட் காத வரத்தினை அருளி எங்களை ஆசீர்வதித்தார் பாபா.

ஆனால் நான் கேட்டு பிரார்த்தித்த அந்த பணம் இன்று வரை எங்களுக்கு கிடைக்கவில்லை. இருப்பினும் நான் கேட்டதோ அழியும் சொத்து. பாபா அருளியதோ பெரும் சொத்தாகிய குழந்தைச் செல்வம்.

இதிலிருந்து நான் கற்ற பாடம் என்னவென்றால், இறைவன் நமக்கு எதை தரவேண்டுமோ, அதை தகுந்த நேரத்தில் தகுந்த நபர்களுக்கு அவர்கள் கேட்காமலேயே தருவார் என்பதைத்தான். எனது வாழ்க்கையில் நான் அனுபவித்த பல்வேறு ஏற்ற இறக்கமான இன்ப துன்பங்களிலும், என்னையும் என் மகனையும இன்று வரை காத்து நிற்கும் தெய்வம் சீரடி தெய்வம். அவரே எங்களது கண்கண்ட தெய்வம்.



கோபால்ராவ் சோம்நாத் நிமோன்கர்!

கோபால்ராவ், சங்கம்நேர் மாவட்டத்தில் நிமோன் என்ற கிராமத்தில் பிறந்தவர். நன்கு படித்தவரான இவர், புனே எஸ்.பி கல்லூரியில் பி.ஏ.எல்.எல்.பி என்ற படிப்பை படித்தார். அவர் சமஸ்கிருதம், ஆங்கிலம், மற்றும் சோதிடத்தில் நன்கு புலமை பெற்றிருந்தார்.

இவருடைய தந்தை சோம்நாத் ஒரு புகழ் பெற்ற சோதிடராக விளங்கியதால், கோபால்ராவிற்கும் சோதிடத்தில் மிகுந்த நாட்டம் இருந்தது. இவை தவிர யோகத்திலும், சிறந்து விளங்கியவர், ஆன்மீகத்திலும் முதிர்ச்சி பெற்றவராக விளங்கினார்.

அவரது பெற்றோர், இவர் குழந்தையாக இருக்கும் போது இவரை தூக்கிக் கொண்டு சீரடிக்குச் சென்று பாபாவிடம் ஆசி பெற்றனர். பாபா இவரை தன் மடியில் கிடத்திக் கொண்டார். பிறகு ஒரு சால்வையால் இவரைப் போர்த்தி, இவனை இன்றுமுதல் ஏக்நாத் என்று கூப்பிடுங்கள் என்றார்.

ஏற்கனவே குழந்தைக்கு, கோபால்ராவ் என்று பெயர் சூட்டி விட்டதால் அவரது தந்தை மிகவும் தர்மசங்கடமாக உணர்ந்தார். அவரது

தர்மசங்கடத்தை உணர்ந்த பாபா, யாருக்கு எப்படியோ, இவன் எனது ஏக்நாத் என்றார்.

1916 ல் எடுக்கப்பட்ட லெண்டி பாக் ஊர்வலப் புகைப்படத்தில் நானாசாகேப் நிமோன்கருக்கு அருகில் நிற்கும் சிறுவனே கோபால் ராவ் ஆகும். இதை பின்னாளில் அவரது மகள் அப்புகைப்படத்தைக் காட்டி உறுதிப்படுத்தினாள்.

இவர் தனது பேச்சுத் திறமையால் ஒரு புகழ் பெற்ற வழக்கறிஞராக அகமது நகரில் புகழ் பெற்று விளங்கினார். பல சட்டக் கல்லூரி மாணவர்கள் அவரிடமிருந்தே வழக்குகளில் திறமையாக வாதாடுவது எப்படி என்று கற்றுத் தேர்ந்தனர்.

அவருக்கு ஆங்கில மொழியில் மிகுந்த புலமை இருந்தது. அதே நேரம் அவர் சமஸ்கிருத மொழியில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். இவர் விஷ்ணு சஹஸ்ரநாமம், ருத்ராபிசேகம், மற்றும் பல்வேறு சூக்தங்களை எல்லாம் தமது வெண்கலக் குரலில் கணீரென பாடும்போது இவரது இல்லமே புனிதமான அதிர்வலைகளால் நிரப்புவதை அவரது குடும்பத்தினரும், அவரது நண்பர்களும் உணர்ந்தனர்.

இருபத்திரண்டு வருடங்களாக மகாசிவராத்திரி அன்று தன் சக வழக்கறிஞர்களோடு ஏக்நாத் மகராஜின் சமாதிக் கோவில் இருக்கும் பைதானிலிருந்து பத்தர்டி மாவட்டத்திலுள்ள மாதெர்தேவ் என்ற புனித தலம் வரை பாத யாத்திரையாக சென்று அங்கு ருத்ர அபிசேகம் செய்வார். பாபா இவரே எனது ஏக்நாத் என்று அழைத்ததில் வியப்பில்லை அல்லவா?

இவர் தனது 73 வது வயதில் இதய நோயை எதிர்கொண்டு உயிர் பிழைத்தார். பிறகு தனது 84 வது வயதில் 19.12.1997 அன்று இவர் சமாதியடைந்தார்.

பாபா வாழ்ந்த காலத்தில் இருந்து இராமநவமி தினத்தன்று, ஒவ்வொரு வருடமும் இரண்டு கொடிகள் ஊர்வலமாக கொண்டு வரப்பட்டு துவாரகாமாயியின் கலசத்தில் கட்டப்படுவது வழக்கம். இரண்டு கொடிகளில் ஒன்று, நிமோன்கர் இல்லத்தில் இருந்தும், மற்றொரு கொடி தாமு அண்ணா இல்லத்தில் இருந்தும் கொண்டுவரப்படுகின்றது. இந்த பாரம்பரியமான வழக்கத்தை கோபால்ராவ் குடும்பத்தினர் இன்றுவரை கடைபிடிக்கின்றனர்.

புனேயிலிருந்து சீரடிக்கு கொடி கொண்டுவரும் புனித வழக்கத்தை தொடர்ந்து செய்திடுவதற்காக பாபா பக்தர்களாகிய நம்மால் நினைவு கூரத்தக்கவர் நமது கோபால்ராவ் சோம்நாத் நிமோன்கர்.



எலைட் எண்டர்பிரைசஸ்

தொப்பம்பட்டி பிரிவு, HDFC பேங்க் அருகில், MTP ரோடு,
கோயம்புத்தூர் - 641 017. செல்: 98434 40806

Authorized Distributor: GS Caltex

Authorized Dealer: Castrol, SERVO, MAK Lubricants, Shell Lubricants, MOTUL, AMARON, SF SONIC

GST No: 33BMOPS1392A1Z3

ELITE ENTERPRISES









GS Caltex
Castrol

P.Sivasaravanan B.E.,
9843440806

Products

- Automobile Engine Oils
- Hydraulic Oils
- Gear Oils
- Compressor Oils
- Cutting Oils
- Greases-Industrial
- Greases-Automobile
- Brake Oil
- Coolant Oil

ELITE ENTERPRISES

All Two Wheeler & 4 Wheeler Batteries Available Here

SF SONIC
AMARON
LASTS LONG. REALLY LONG.









HOME UPS AVAILABLE

ஆட்டோ மொபைல் ஆயில், இண்டஸ்ட்ரியல் ஆயில், க்ரீஸ், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன பேட்டரிகள், வீட்டு உபயோக UPS, பேப்பரிகள் கிடைக்கும்.

கொலஸ்ட்ராலை குறைக்கும் வெங்காயம்



நோய்களைக் குணப்படுத்தும் விதத்தில் அணுகுண்டைப் போல் பேராற்றல் வாய்ந்த காய்கறியாக வெங்காயம் சிறந்து விளங்குகிறது.

ஆண்டு முழுவதும் கிடைக்கும் வெங்காயம் இயற்கை கொடுத்துள்ள உணவு வகைகளுள் முதலிடத்தில் இருக்கிறது. உயர்தரமான புரதம், அதிக அளவில் கால்சியம், ரிபோபிளவின் போன்றவை இதில் அடங்கியுள்ளன. சிறு வெங்காயம், பெரிய வெங்காயம் என்று பல்வேறு இனங்கள் உள்ளன. அனைத்தையும் நீண்ட நாள்கள் பாதுகாப்பு நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளாமல் வைதிருந்தும் பயன்படுத்தலாம்.

வெங்காயத்தில் உள்ள வாசனை கந்தகப் பொருள்களின் கூட்டுப் பொருளால் உண்டாகிறது. ஒரு வெங்காயத்தைப் பச்சையாகக் கடித்துச் சாப்பிட்டால் அந்த வாசனை மறைய நீண்ட நேரம் ஆவதற்கு இதுதான் காரணம் இப்படிக் கடித்துச் சாப்பிட்டால் வாயில் உள்ள புண், கண்வலி, முதலியன குணமாகும். காரணம், வெங்காயத்தில் அதிக அளவு உள்ள ரிபோபிளவின் என்னும் 'பி' குரூப் வைட்டமினே இவற்றை எல்லாம் குணப்படுத்துகிறது.

சிறிய வெங்காயம் என்றாலும் சரி, பெரிய வெங்காயம் என்றாலும் சரி இரண்டிலும் ஒரே மாதிரியான மருத்துவக் குணங்கள்தான் உள்ளன.

வெங்காயத்தை வதக்கியோ வேகவைத்தோ எப்படி வேண்டுமானாலும் சாப்பிடலாம். அதில் உள்ள நறுமணச் சுவையோ, குணப்படுத்தும் மருத்துவக் குணங்களோ குறைந்துவிடாமல் அப்படியே கிடைக்கும். உடலுக்குக்

கிளர்ச்சியூட்டும், சிறுநீர்க் கழிவினைத் தூண்டும், தோலைச் சிவக்கவைக்கிற மேற்பூச்சு மருந்தாகப் பயன்படும். கபத்தை வெளிக் கொண்டுவரப் பயன்படும். இவ்வாறு பல்வேறு வகைகளில் வெங்காயம் சிறந்த உணவு மருந்தாகத் திகழ்கிறது.

இரத்தம் விருத்தியாகத் தினமும் வெங்காயத்தைப் பச்சையாகச் சாப்பிட வேண்டும். நன்கு செரிமானம் ஆக பச்சையாகவோ, சமைத்தோ மற்ற உணவுகளுடன் சேர்த்தோ சாப்பிட வேண்டும்.

காய்ச்சல், சிறு நீர்க் கோளாறு, இருமல் போன்றவை குணமாக பெரிய வெங்காயம் ஒன்றை மிக்ஸி மூலம் இரசமாக மாற்றி அருந்த வேண்டும். வெங்காயம் உடலுக்குக் கிளர்ச்சியூட்டும் மருந்து. எனவே, அதைச் சாறாகச் சாப்பிடுகிறவர்கள் அளவுடன்தான் சாப்பிட வேண்டும்.

குளிர்காய்ச்சல் குணமாக வெங் காயத்துடன் மிளகையும் சேர்த்துச் சாப்பிட வேண்டும். இதயப் பையின் சுவர்தசைக்குக் குருதி வழங்கும் நாடி நாளங்களில் இரத்த உறைவு ஏற்பட்டிருந்தால் நெஞ்சு வலிக்கும். அப்போது வெங்காயத்தை சாப்பிட் டால் உடனே இரத்தம் உறைவது அகற்றப்பட்டு இதயத்துக்குத் தடை யின்றி நாளங்கள் வழியாக இரத்தம் செல்லும்,

நெஞ்சு வலியும் குணமாகும். இதனால்தான் இயற்கை மருத்துவர்கள் நெஞ்சுவலித்தால் உடனே வெங்காயம் சாப்பிடச் சொல்கிறார்கள்.

இதய நோயாளிகளும், இரத்த அழுத்த நோயாளிகளும் கொலாஸ்டிரல் குறையவும் இதயம் சீராகத் துடிக்கவும் தினமும் 100 கிராம் வெங்காயத்தை பச்சையாகச் சாப்பிடவும்.

சிகரெட் பிடிப்பவர்கள் நுரையீரல், புகையினால் பாதிக்கப்படுகிறது. இவர்கள் ஒரு வேளைக்கு அரை அவுன்ஸ் வெங்காயச் சாறு வீதம் தினமும் நான்கு வேளை அருந்த வேண்டும். இதனால் நுரையீரல் பலம் பெறும். இதே முறையில் வெங்காயச் சாற்றை அருந்தினால் இருமல், கபம், இரத்த வாந்தி, நீண்ட நாள்களாக இருந்து வரும் ஜலதோஷம், சளி முதலியவையும் பூரணமாய் குணமாகும்.

ஜலதோஷம்,இருமல், மார்புச்சளி, சளிக்காய்ச்சல் முதலியவை உடனே குணமாக வெங்காயச்சாறு, தேன் இரண்டையும் சம அளவு கலந்து தினமும் 50 மில்லி சாப்பிடவேண்டும். இந்த கலவையை சாப்பிடுவதால் மூச்சுச் குழல் தொடர்பான அனைத்து நோய்களும் எந்த விதமான கெடுதலும் இன்றி உடனே குணமாகும்.

100 கிராம் வெங்காயத்தில் ஈரப்பதம் 82%ம், புரதம் 1.2%ம், கார் போஹைடிரேட் 11.1%ம், மீதியில் கொழுப்பு தாது உப்புகள் நார்ச்சத்து முதலியவையும் உள்ளன. 47 மில்லி கிராம் கால்சியமும், 50 மில்லி கிராம் பாஸ்பரஸும், 0.7 மில்லி கிராம் இரும்புச் சத்தும், வைட்டமின் 'பி', வைட்டமின் 'சி' முதலியன சிறிதளவும் உண்டு. கிடைக்கும் கலோரி 51.

வெங்காயத்தில் உள்ள இரும்புச்சத்து மிக எளிதாய் உடலில் கலந்துவிடும். இதனால் இரத்த சோகை நோயாளிகள் விரைவில் தேறிவிடுவார்கள்.

தினமும் வெங்காயத்தை உணவில் சேர்த்தால் தலைவலி, முழங்கால் வலி, பார்வை மங்குதல் முதலியவை குணமாகும். சளி உள்ளவர்கள் வெங் காயத்தை தொடர்ந்து சாப்பிட்டால் சளி வெளியேறி இரத்தமும் சுத்தமாகிவிடும்.



வெங்காயத்தை வதக்கிச் சூட்டுடன் ஒருதுணியில் வைத்து பருக்கள், புண்கள், வெட்டுக் காயங்கள் முதலிய இடங்களில் ஒத்தடம் கொடுத்தால் விரைவில் குணம் பெறுவார்கள்.

காலரா நோய்க்கு மிகச்சிறந்த மருந்து வெங்காயம். காரம் அதிகம் இல்லாத வெள்ளை நிற வெங்காயத்தில் ஐம்பது கிராமும், பத்து மிளகும் இதற்குப் போதும். உரித்த வெங்காயத்தையும் மிளகையும் ஒன்றாக வைத்து இடிக்க வேண்டும். அதனோடு ஜீனி சேர்த்து காலரா நோயாளிக்குக் கொடுக்க வேண்டும். வெங்காயம், மிளகு, ஜீனி சேர்த்த இந்தத் துவையல் காலரா நோயாளியின் தாகத்தைத் தணித்து மனத்திற்கு அமைதியைத்தரும். மேலும் வாந்தி, சீத பேதி முதலியவற்றையும் உடனடியாக இந்தத் துவையல் கட்டுப்படுத்திவிடும்!

இரத்தமூலம் குணமாக முப்பது கிராம் வெங்காயத் துண்டுகளைத் தண்ணீரில் போடவும். அதில் ஐம்பது கிராம் ஜீனியையும் சேர்த்து அருந்த வேண்டும். தினமும் இரு வேளை அருந்தினால் பத்து அல்லது பதினைந்து நாள்களில் இரத்தமூலமும், மூல நோயும் குணமாகும். வெங்காயத் துண்டுகளை டம்ளரில் நன்கு இடித்துப் போட வேண்டும்.

காதில் சத்தம் வந்துகொண்டே இருந்தால் வெங்காயச் சாற்றில் ஒரு துணியை நனைத்து அத்துணியை பிழிந்து சில துளிகளைக் காதில் விட வேண்டும். இது ரஷ்யாவில் பிரபலமான மருத்துவமுறை, மயங்கி விழுந்துவிட்டவர்களின் மூக்கில் இரு துளி வெங்காயச்சாற்றை விட்டால் உடனே மயக்கம் தெளிந்து எழுவார் கள். காதில் வலி இருந்தால் சூட வைக்கப்பட்ட வெங்காயச் சாற்றில் ஒரு துணியை நனைத்து அத்துணியைப் பிழிந்து இரண்டு மூன்று துளிகளைக் காதில் விடவேண்டும்.

பற்களில் பாக்டீரியாக்கள் தங்க விடாமல் இருக்கத் தினமும் ஒரு வெங்காயத்தை பச்சையாகக் கடித்துச் சாப்பிட வேண்டும். இப்படிமென்று தின்றால் பாக்டீரியாக்கள் அழிந்துவிடும் பற்களும், ஈறுகளும் பாதிக்கப்படுவதும் முன் கூட்டியே தடுக்கப்படும்.பல் வலி உள்ள இடத்தில் ஒரு துண்டு வெங்காயத்தை வைத்துக்கொண்டால் பல்வலி குறையும். தாராளமாக கிடைக்கும் வெங்காயம் மிகச்சக்தி வாய்ந்த மருந்தாகவும் இருப்பது மனிதனுக்கு இயற்கை அளித்துள்ள பெரிய பரிசாகும்.

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

S.Jayanthy,
17/7 **A**, *பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,*
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைனில் அனுப்ப:
S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு. சந்திரன். பாபா பாடகர். வில்லிவாக்கம். ரூ.10000.
திரு.பாலகிருஷ்ணன். அண்ணாநகர் ரூ.3000.
செல்வி. கீர்த்தனா ராஜேந்திரன்.
திருவான்மியூர் - ரூ.3000.
திருமதி.ஹேமாவதி நமசிவாயம். சாலிகிராமம். ரூ.2000.
திருமதி.இராஜேஸ்வரி.மணலி.ரூ.1500.
திரு.ஆர்.கவுதம புத்தன். குரோம்பேட்டை. ரூ.1000.
திரு.வெங்கடாசலம். டி.நகர். ரூ.1000.
திரு.சுடலை முத்து. தூத்துக்குடி.ரூ.1000

திரு. சி.டி. ரமேஷ். பெரியார் நகர். ரூ.1000.
திரு. எஸ். சுபாபிரபா. மதுரை.ரூ.1000.
திரு. ஸ்ரீராம். விவேகானந்தா கல்லூரி பாண்டிச்சேரி. ரூ.1000.
திருமதி.உமா விஜய் ஆனந்த். அயனாவரம். ரூ.800
திருமதி.லோகேஸ்வரிகார்த்திக். மதுரை.ரூ.500.
திரு.கேஸ்வர்.ஈரோடு.ரூ.500.
திருமதி. நித்யா.கூடுவாஞ்சேரி.ரூ.500.
திருமதி. வாழ்க வளமுடன் சுமதி, பெரியார் நகர். ரூ.500.
திரு. பாபு லதா. வேப்பம்பட்டு.ரூ.500.
திருமதி. இந்துமதி குடும்பத்தார். அயனாவரம். ரூ.500.
திருமதி.சுமையாபானு.AYK. ரூ.500
திருமதி.பாக்கியவதி. ராணிப்பேட்டை. ரூ.400.
திரு.சக்திவேல் உமா.AYK.ரூ.200.
திரு.குமரன் ஸ்டோர்ஸ்.-டிராவல்ஸ். பெரியார் நகர் ரூ.200.
திரு.கே.ராமமூர்த்தி. ஓய்வு.அசோக் லேலண்ட். கொளத்தூர்.ரூ.200.
திருமதி.ரங்கநாயகி குடும்பத்தார். திட்டை.ரூ.200.
திருமதி.திலகம் இதயக்கனி. கதிர். ரூ.200.
திருமதி. சாந்திமோகன். AYK. ரூ.100.
திருமதி.அபிராமி அசோக்.AYK. ரூ.100.
திரு.அகஸ்டின் குடும்பத்தார். திருநீர்மலை. அரிசி 25 கி.
திரு.சிவா அரிசி மளிகை பெரியார் நகர் ரூ.50.
பெரியார் நகர் பாபா பக்தர்கள். ரூ. 50.

என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின் ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.



சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 220 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 550 (தபால் செலவு உள்பட)
* ஆயுள் சந்தா – ரு. 2,000 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர்
'சாயி மகராஜ் குருவை தேடி',
17/7 A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைன் முலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

திரு. ஜெய்மா நர்சரி பள்ளி. மண்ணடிமங்கலம். ரூ. 500.
திருமதி.சுமதி. வாழ்க வளமுடன் கொளத்தூர். ரூ.500.
திரு. திலகம். குரோம்பேட்டை. ரூ.200.
திரு.மங்கையர்கரசி. திருச்சி. ரூ 200./ திரு.வேணுகோபால்.நங்கநல்லூர்.100.
திரு.நீல நாராயணன், கொட்டையூர் – ரூ.400

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:

ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.

போன்: 9941816692, 8825831068.



சாய் ராஜயோகாவின் தயாரிப்பு

அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.

குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.




தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:

சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்

9941816692,
8825831068.

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068